வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු




மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 05.06.2025 வியாழக்கிழமை இதழ் : 156 பக்கங்கள் : 12

### உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி:

# தமிழ் அரசு - ஈ.பி.டி.பி இன்று சந்தித்து பேச்சு!

யாழ்ப்பாணம், ஜூன் 05

**உள்ளூராட்சி சபைகளில் இணைந்து ஆட்சி அமைப்பது தொடர்பில் இலங்கை தமிழ் அரசு கட்சியும் ஈழமக்கள் ஜனநாயக கட்சியும் (ஈ. பி. டி. பி) இன்று வியாழக்கிழமை சந்தித்து பேச்சு நடத்தவுள்ளன. இந்த தகவலை இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பதில் தலைவர் சீ. வீ.கே.சிவஞானம் 'ஈழநாடு'க்கு உறுதிப்படுத்தினார்.**

இதனிடையே, யாழ். மாநகர சபையில் ஜே.வி.பியுடன் இணைந்து ஆட்சி அமைப்பது தொடர்பான பேச்சுகளை அவர் மறுத்துள்ளார். இவ்வாறு வெளியான தகவல்கள் "கடும் கற்பனை", என்றும் அவர் கூறினார்.

உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி அமைப்பது தொடர்பில் பேச்சுக்கு வருமாறு டக்ளஸ் தேவானந்தாவுக்கு தான் குறுந்தகவல் (எஸ். எம். எஸ்) மூலமாக அழைப்பு விடுத்திருந்தார் என்றும் அதனை அவர் ஏற்றுக் கொண்டுள்ளார் எனவும் சீ. வீ. கே.

11

### சர்வதேச கண்காணிப்பை வலியுறுத்தி

## செம்மணியில் இன்று கவனவீர்ப்பு போராட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 05

அரியாலை - சித்துப்பாத்தி மனித புதைகுழி சர்வதேச கண்காணிப்பின் கீழ் அகழ்வு மேற்கொள்ளப்பட வேண் டும் என்று வலியுறுத்தி இன்று வியாழக்கிழமை கவனவீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

செம்மணி சந்தியில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படும் என்றும், இந்தப் போராட்டத்துக்கு அனைவரும் ஆதரவு தரவேண்டும் எனவும் வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சங்கம் கேட்டுள்ளது.

கிளிநொச்சியிலுள்ள காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்க பணிமனையில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே சங்கத்தின் தலைவி யோ. கலாரஞ்சினி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், "காலத்துக்கு காலம் பல்வேறு மனித புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டு அகழ்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆனால்,

11

## 6 பேருக்கு கோவிட் ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, ஜூன் 05

நாட்டில் மீண்டும் கோவிட் -19 தொற்று பரவிவரும் நிலையில் தொற்றால் ஒருவர் உயிரிழந்தார் என்று சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

அநுராதபுரத்தில் 6 பேருக்கு கோவிட் தொற்று ஏற்பட்டதாகவும், இவர்களில் ஒருவர் கடந்த ஏப்ரல் மாத இறுதியில் உயிரிழந்தார் என்றும் தொற்றுநோயியல் மருத்துவ நிபுணர் தேஜன சோமதிலக நேற்று தெரிவித்தார்.

ஏனைய ஐவரும் சிகிச்சையின் பின்னர் வீடு

11

## மிகப்பெரும் மனித புதைகுழியாக செம்மணியை அறிவிக்கவேண்டும்

### பாராளுமன்றில் கஜேந்திரகுமார் வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 05

"செம்மணியை மிகப்பெரும் மனித புதைகுழியாக பிரகடனப் படுத்தவேண்டும். அதனை அகழ்வதற்கான நிதியை ஒதுக்கவேண்டும். தேவையெனில், வெளிநாடுகளிலிருந்து நாம் நிதி யைப் பெற்று தருவோம்" - இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன் கிழமை உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "யாழ்ப்பாணம் - செம்மணியில் பெரும் மனித புதை குழிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இங்கே எலும்புக்கூடுகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. சர்வதேச ரீதியிலான மிகப்பெரும் மனித புதைகுழி என்று கூறும் தன்மையை அது கொண்டுள்ளது. அந்த இடத்துக்கு எந்தவித பாதுகாப்பும் இடப்படவில்லை. மக்கள் அங்கு சென்று எதனையும் செய்யலாம் என்பது போன்றுள்ளது.

11

### வெண்கல செட்டிகுளம் பிரதேச சபையில்

## தென்னிலங்கை கட்சி ஆட்சியமைக்க தமிழ் அரசு, ஜ.த.தே. கூட்டணி ஆதரவு

**- குமாரா. கோகுலன் -**

வவுனியா, ஜூன் 05

வெண்கல செட்டிகுளம் பிரதேச சபையில் தென்னிலங்கை கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியமைக்க இலங்கை தமிழ் அரசு கட்சி, ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி என்பன ஆதரவு வழங்கத் தீர்மானித்துள்ளன என்று அறியவருகிறது.

18 உறுப்பினர்களைக் கொண்ட வெண்கல செட்டிகுளம் பிரதேச சபையில் ஐக்கிய மக்கள் சக்தி 4, தேசிய மக்கள் சக்தி 3, இலங்கை தமிழ் அரசுக் கட்சி 3, ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி 2, சிறீ லங்கா தொழிலாளர் கட்சி 2, ஜனநாயக தேசிய கூட் டணி 2, சிறீ லங்கா முஸ் லிம் காங்கிரஸ், சுயேச்சை குழு என்பன தலா ஓர்

11

## அரசியல் நோக்கத்துக்காக மட்டுமே எம்மீது நடவடிக்கை எடுக்கலாம்

### முன்னாள் அமைச்சர் டக்ளஸ் சொல்கிறார்

யாழ்ப்பாணம், ஜூன் 05

"ஆளும் தரப்பினர் நினைத்தால் விரும்பிய வாறு விசாரணைகளை மேற்கொள்ளலாம். எமக்கு எதிராகவும் அவ்வாறான நடவடிக்கைகளை எடுக்கலாம். எமக்கு எதிராக அவ்வாறான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமாயின், அவை அரசியல் நோக்கம் கொண்டவையாக இருக்குமே தவிர, உண்மையாக இருக்காது.", இவ்வாறு கூறியிருக்கிறார் முன்னாள் அமைச்சரான டக்ளஸ் தேவானந்தா.

ஈழ மக்கள் ஜனநாயக கட்சி (ஈ. பி. டி. பி.) சார்பில் தெரிவான உள்ளூராட்சி உறுப்பினர்கள் உறுதியுரை எடுக்கும் நிகழ்விலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், ஈ. பி. டி. பி. கட்சியின்

11

## உங்களின் பதவிகளுக்காக தமிழ் மக்களை விற்காதீர்கள்

### தமிழர் விடுதலை கூட்டணி

யாழ்ப்பாணம், ஜூன் 05

"உங்களின் பதவிகளுக்காக தமிழ் மக்களை விற்காதீர்கள்", - இவ்வாறு கூறியுள்ளார் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் வீ. ஆனந்தசங்கரி.

நேற்று யாழ். ஊடக அமையத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், "தந்தை செல்வா, ஜீ. ஜீ. பொன்னம்பலம், தொண்டமான் உள்ளிட்டவர்கள் உருவாக்கிய தமிழர் விடுதலைக் கூட்டணி இன்றும் இருக்கிறது. தமிழர் விடுதலைக் கூட்டணியும் நானும் உயிரோடு இருக்கிறோம்.

11

## மட்டக்களப்பு அபிவிருத்தி குழு தலைவராக ஹந்துன்நெத்தி!

மட்டக்களப்பு, ஜூன் 05

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி குழுவின் புதிய தலைவராக அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி நியமிக்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி குழுக் கூட்டம் எதிர்வரும் 11ஆம் திகதி புதன்கிழமை அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி தலைமையில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, இந்தக் கூட்டத்துக்கான முன்னோடி கூட்டம் நேற்று புதன்கிழமை மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. இதில், மட்டக்களப்பு மாவட்ட பாரா ளுமன்ற உறுப்பினர்கள், அரச அதிபர்

11

### கணேமுல்லை சஞ்சீவ கொலை:

## சந்தேகநபரை சாட்சிகள் அடையாளம் காணவில்லை!

கொழும்பு, ஜூன் 05

நீதிமன்ற சாட்சிக்கூண்டுக்குள் கணேமுல்லை சஞ்சீவ சுட்டுக் கொலை செய்யப்பட்ட வழக்கில் துப்பாக்கிச் சூடு நடத்தியவர் என்று கூறப்படும் சந்தேக நபரை நேரில் கண்ட சாட்சிகள் அடையாளம் காணவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு நீதிவான் நீதிமன்றில் நடந்த இந்த அடையாள அணிவகுப்புக்காக துப்பாக்கிச்சூட்டை நடத்தியவர் என்று கூறப்படும் சமிந்து தில்ஷான் பியுமங்க பலத்த பாதுகாப்புடன் அழைத்து வரப்பட்டார்.

இதன்போது, துப்பாக்கிச்சூட்டை நேரில்

11

**உண்மைகள் புனிதமானவை, கருத்துக்கள் சுதந்திரமானவை**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று கவனவீர்ப்பு போராட்டம்!

யாழ்ப்பாணம், ஜூன் 05

குருந்தூர்மலையில் கைது செய்யப்பட்ட விவசாயிகளை விடுதலை செய்ய வலியுறுத்தியும் உகந்தைமலை திட்டமிட்ட பௌத்த மயமாக்கலை தடுத்து நிறுத்த கோரியும் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் நேற்று பல்கலைக்கழகத்தின் பிரதான நுழைவாயிலில் கவனவீர்ப்பில் ஈடுபட்டனர்.

இதன்போது, "வடக்கும் கிழக்கும் தமிழர் தாயகம்", "இந்த மண் எங்களின் சொந்த மண்", "மயிலத்தமடு மாதவனை எங்கள் சொத்து", "கலாசார அழிப்பை நிறுத்து", "தமிழரின் நிலம் தமிழருக்கு", "நிலம் எங்கள் சொத்து அதனை பறிக்க முனையாதே", "விவசாயிகளை விடுதலை செய்" என்ற கோஷங்களை எழுப்பியிருந்தனர். (ஐ -05)



# யோகக்கலை வகுப்புகள்!

யாழ்ப்பாணம், ஜூன் 05

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகால் உடல், உள மேம்பாட்டுக்காக இலவசமாக நடத்தப்பட்டு வருகின்ற யோகக்கலை அடிப்படை கற்கைநெறியின் புதிய பிரிவு நல்லூர் கந்தன் ஆலய பின்வீதியில் அமைந்துள்ள மங்கையற்கரசி வித்தியாலயத்தில் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 6.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

சனி, ஞாயிறு தினங்களிலும் அரச விடுமுறை தினங்களிலும் காலை 6.00 மணிமுதல் காலை 8.00 மணிவரை நடைபெறும் இந்த வகுப்புகளில் ஆர்வமுள்ள இரு பாலாரும் வயது வேறுபாடின்றி கலந்துகொள்ள முடியும். சுமார், மூன்று மாத காலங்களை கொண்டமைந்த இந்த அடிப்படைக் கற்கை நெறியை பூரணமாக முடிப்பவர்களுக்கு கல்வி அமைச்சால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. பயிலவிரும்புவோர் அன்றைய தினம் நேரடியாக வந்து பதிவுகளை மேற்கொண்டு வகுப்பில் இணைந்து கொள்ளுமாறும் மேலதிக தகவல்களை 021 222 2203 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம் எனவும் கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார். (ஐ)

# தாய்மொழி ஆசிரியர் சங்கம் நேற்று யாழில் கவனவீர்ப்பு!

யாழ்ப்பாணம், ஜூன் 05

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து தாய்மொழி ஆசிரியர் சங்கத்தினர் நேற்று புதன்கிழமை வட மாகாண ஆளுநர் செயலகம் முன்பாக கவனவீர்ப்பில் ஈடுபட்டனர்.

யாழ். மாவட்ட செயலகம் முன்பாக ஆரம்பமான பேரணி அருகிலுள்ள ஆளுநர் செயலகம் வரை சென்றது. பேரணியாக சென்றவர்களை ஆளுநர் செயலகத்துக்குள் பொலிஸார் அனுமதிக்கவில்லை. எனினும், அவர்களின் பிரதிநிதிகள் சிலர் மட்டும் உள்ளே செல்ல அனுமதி வழங்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து ஆசிரியர் சங்கத்தின் பிரதிநிதிகள் ஆளுநரை சந்தித்து தமது கோரிக்கைகள் அடங்கிய மனுவை ஆளுநரிடம் கையளித்தனர்.

இதன் பின்னர், ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட ஆசிரியர் சங்கத்தினர், "யாழ்ப்பாணத்திலிருந்து வெளி மாகாணங்களுக்கு ஆசிரியர் சேவையில் ஈடுபட்டவர்களுக்கு மீண்டும் வெளி மாவட்டங்களுக்கு பணி இடமாற்றம் வழங்கப்படுகிறது.

ஆசிரியர்கள் மருத்துவ காரணங்களுக்காக வெளி மாவட்ட இடமாற்றங்களை இரத்து செய்யுமாறு மேன் முறையீடு செய்துள்ள நிலையில், அதனை கருணை அடிப்படையில் பரிசீலனை செய்ய வேண்டும், வெளிமாவட்டம் செல்லாமல் பல ஆசிரியர்கள் தொடர்ந்தும் யாழ்ப்பாண மாவட்டத்தில் சேவையாற்றி வரும் நிலையில், பாரபட்சமின்றி இடமாற்றங்களை வழங்க வேண்டும் போன்ற கோரிக்கைகளை ஆளுநரிடம் முன்வைத்திருக்கிறோம். இந்த விடயங்கள் தொடர்பில் பரிசீலனை செய்து விரைவில் சாதகமான முடிவை அறிவிப்பதாக ஆளுநர் உறுதியளித்தார் - என்றனர். (ஐ)

மரக்காலையில் தீ பரவல்

# கரவெட்டி பிரதேச சபையின் துரித செயலால் பெரும் சேதம் தவிர்ப்பு

வடமராட்சி, ஜூன் 05

தீ பரவலால் மரக்காலை கரவெட்டி பிரதேச சபையின் உடனடி நடவடிக்கையால் பெரும் சேதமின்றி காப்பாற்றப்பட்டது.

கரவெட்டி, சாமியன் அரசடி பகுதியில் அமைந்துள்ள மரக்காலையில் நேற்று முன்தினம் தீ பரவியது.

இதுபற்றி அறிந்த கரவெட்டி பிரதேச சபையின் செயலாளர் கணேசன் ஹம்சநாதன், உத்தியோகத்தர்கள் அப்பகுதி பொதுமக்களுடன் இணைந்து உடனடியாக செயல்பட்டு தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

மின்னொழுக்கின் காரணமாகவே தீ விபத்து ஏற்பட்டதாகவும் கதவுகள், நிலைகள் உள்ளிட்ட சில மரம் சார்ந்த பொருள்கள் தீயில் எரிந்து நாசமாகின. எனினும், துரிதமாக செயல்பட்டமையால், பல இலட்ச ரூபாய் பெறுமதியான இயந்திரங்கள், மரப்பலகைகள் போன்றவற்றுக்கு தீப்பரவல் ஏற்படாமல் பாதுகாக்க முடிந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் கரவெட்டி பிரதேச சபையின் செயலாளர் கணேசன் ஹம்சநாதன் கருத்து தெரிவிக்கையில்,

மரக்காலையில் தீப்பரவல் ஏற்பட்டுள்ளதாக எங்களுக்கு மாலை 6 மணியளவில் தகவல் கிடைத்த போது வருமான வரி உத்தியோகத்தர்கள், சாரதிகள், பாதுகாப்பு உத்தியோகத்தருடன் தண்ணீர் தாங்கி பவுஸருடன் சென்று உடனடியாக செயல்பட்டதால் மேலும் தீ பரவாமல் கட்டுக்குள் கொண்டுவரக் கூடியதாக இருந்தது. அந்தப் பகுதி மக்களும், மரக்காலை தொழிலாளர்களும் இணைந்து தீயை அணைக்கும் பணியில் உதவினர். நெல்லியடி பிரதேசத்தில் கடந்த ஒரு மாத காலத்துக்குள் இடம்பெற்ற இரண்டாவது தீ விபத்து இதுவாகும். இரண்டுமே மின்னொழுக்கு காரணமாகவே இடம்பெற்றுள்ளன. ஆகவே மின்சார பாவனையுள்ள தொழில் சார்ந்த நிறுவனங்களை நடத்துவோர் மிகுந்த அவதானத்துடன் செயல்பட வேண்டும் - என்றார். (ஐ-02)

# மு. சிவசிதம்பரத்தின் 23ஆவது நினைவுதினம்

வடமராட்சி, ஜூன் 05

தமிழர் விடுதலை கூட்டணியின் முன்னாள் தலைவரும் முன்னாள் உப சபாநாயகருமான அமரர் மு. சிவசிதம்பரத்தின் 23ஆவது நினைவு தினம் இன்று வியாழக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

நெல்லியடி பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள அன்னாரின் சிலை வளாகத்தில் நினைவுதின நிகழ்வுகள் முன்னெடுக்கப்படும் என்று ஏற்பாட்டாளர்களான கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியம் அறிவித்துள்ளது. (ஐ-02)

# பொன். சிவகுமாரன் நினைவுதினம் இன்று



யாழ்ப்பாணம், ஜூன் 05

தமிழின விடுதலை போராட்டத்தில் முதன் முதலாக உயிர் நீத்த தியாகி பொன். சிவகுமாரின் 51ஆவது நினைவுதினம் இன்று வியாழக்கிழமை காலை 9 மணி முதல் நடைபெறவுள்ளது.

உரும்பிராயில் அமைந்துள்ள பொன். சிவகுமாரின் நினைவுச்சிலை அருகே நினைவேந்தல் நிகழ்வு முன்னெடுக்கப்படவுள்ளது. (ஐ)

# 4.6 இலட்சம் ரூபாய்க்கு ஏலம் போன மாம்பழம்


யாழ்ப்பாணம், ஜூன் 05

முருகப் பெருமானுக்கு சாத்தப்பட்ட மாம்பழம் 4 இலட்சத்து 60 ஆயி ரம் ரூபாய்க்கு ஏலம் போயுள்ளது.

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை கோட்டையம்பதி சிறீ சிவசுப்பிரமணியர் ஆலயத்திலேயே இந்த மாம்பழம் ஏலம் போயுள் ளது.

ஆலயத்தின் பெருந் திருவிழா தற்போது நடைபெற்று வருகிறது. இதில், 8ஆம் திருவிழாவான நேற்று முன்தினம் மாம்பழத் திருவிழா நடைபெற்றது.

திருவிழாவின் நிறைவில் முருகப்பெருமானுக்கு சாத்தப்பட்ட மாம்பழம் ஏலத்தில் விடப்பட்டது. இதன்போது, பக்தர்கள் பலரும் அந்த மாம்பழத்தை ஏலத்தில் எடுக்கப் போட்டியிட்டனர். இறுதியாக, 4 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய்க்கு புலம்பெயர் தமிழரான அ. அகிலன் என்பவர் மாம்பழத்தை ஏலத்தில் எடுத்தார்.



இதேவேளை, இந்த ஆலயத்தின் தேர்த் திருவிழா எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமையும் தீர்த்த திருவிழா மறுநாள் திங்கட்கிழமையும் நடைபெறவுள்ளன. (ஐ-05)

# சிலை திறப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூன் 05

சுன்னாகம் பட்டின சபைத் தலைவராக இருந்து சுன்னாகம் நகரத்தை வடிவமைத்த அமரர் செனட்டர் பொன். நாகலிங்கத் தின் உருவச்சிலை வலி. தெற்கு பிரதேச சபை முன்பாக திறந்து வைக்கப் படவுள்ளது.

நாளை மறுதினம் சனிக் கிழமை காலை 9 மணிக்கு சு. தம்பித்துரை தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் கலந்து கொள்ளவுள்ளார்.

கௌரவ விருந்தினர்களாக யாழ். மாவட்ட பதில் அரச அதிபர் ம. பிரதீபன், வலி. தெற்கு பிரதேச செயலர் பா. ஜெயகரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொள்ளவுள்ளனர். (ஐ)

# குந்தவை கதைகள் நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூன் 05

தமிழியல், காலச்சுவடு வெளியிட்ட "குந்தவை கதைகள்" நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்ப்பாணம் சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

உடுவில் அரவிந்தன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் வெளியீட்டுரையை அ. யேசுராசா நிகழ்த்துவார். தொடர்ந்து, இ. இராஜேஸ்கண்ணன், சி. ரமேஷ், சிறீலேகா பேரின்பகுமார் ஆகியோர் உரைகளை ஆற்றுவர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
05.06.2025 வியாழக்கிழமை
விசுவாவசு வருடம், வைகாசி 22

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தேசிய பாடசாலை விவகாரம்

"தேசிய பாடசாலைகளாக அறிவிக்கப்பட்ட ஆயிரம் பாடசாலைகள் மீளவும் மாகாண சபையின் கீழ் கொண்டு வரப்படமாட்டாது", என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய குறிப்பிட்டிருக்கிறார். இந்த விடயத்தை பாடசாலைகள் விவகாரமாக மட்டும் நோக்கினால் இதன் பின்னாலுள்ள அரசியலை புரிந்து கொள்ளமுடியாது. "ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்" என்பதுபோல ஹரிணியின் கருத்தானது தேசிய மக்கள் சக்தியின் அரசியல் நகர்வுகளை எதிர்வு கூறுகிறது. அதாவது, முன்னைய ஆட்சியாளர்கள் தவறான பாதையில் சென்றவர்கள் அவர்களின் அரசியல் தீர்மானங்கள் நாட்டை அதல பாதாளத்தில் தள்ளிவிட்டது என்னும் வாதத்தை முன்வைத்தே தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அதிகாரத்தை கைப்பற்றியது.

முன்னைய ஆட்சியாளர்களை விடவும் இவர்கள் வித்தியாசமானவர்கள், மாற்றங்களை ஏற்படுத்தும் எண்ணமுள்ளவர்கள் என்னும் அடிப்படையில் தான் தமிழ் மக்கள் மத்தியிலும் தேசிய மக்கள் சக்திமீதான விருப்பம் அதிகரித்தது. இந்த அடிப்படையில்தான் வடக்கு, கிழக்கில் அதிகமான தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களை தேசிய மக்கள் சக்தி கைப்பற்றியது. ஆனால், முன்னைய ஆட்சியாளர்கள்மீது குற்றஞ்சாட்டியவர்கள் அவர்களால் பின்பற்றப்பட்ட மாகாண சபை விவகாரம் தொடர்பான தமிழ் மக்களின் அடிப்படையான பிரச்னைகள் தொடர்பான விடயங்களில் மாற்றங்களைக் காண்பிக்க விரும்பாதவர்களாகவே இருக்கின்றனர். அரசியல் விடயங்களில் முன்னைய ஆட்சியாளர்கள் எவ்வாறான நிலைப்பாட்டை கொண்டிருந்தனரோ அதனையே பின்பற்றி வருகின்றனர்.

பிரதமர் ஹரிணியின் தேசிய பாடசாலைகள் தொடர்பான அறிவிப்பானது தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் மாகாண சபை முறைமை தொடர்பான எதிர்மறையான நிலைப்பாட்டையே தோலுரித்துக் காட்டுகிறது. அரசமைப்பின் பதின்மூன்றாவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தும் விடயத்தில் முன்னைய ஆட்சியாளர்கள் போன்றுதான் தேசிய மக்கள் சக்தியும் நடந்து கொள்ளப் போகிறது என்பதையே காண்பிக்கிறது.

இந்த விடயம் தொடர்பில் தமிழ் கட்சிகள் ஒரு குடையின் கீழ் செயலாற்ற வேண்டும். தமிழ்த் தேசிய அரசியலை பிரதிநிதித்துவப்படுத்துவதாகத் தங்களை அடையாளப்படுத்திக் கொள்ளும் கட்சிகள் புதிய அரசமைப்பின் மூலமாக தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்று வாதிடுகின்றனர். அவ்வாறு நடந்தால் அது வரவேற்கப்பட வேண்டிய விடயம்தான். ஆனால், மாகாண சபை மூலமான அதிகாரங்களையே பலவீனப்படுத்தும் எண்ணத்தோடு இருப்பவர்கள் எவ்வாறு புதிய அரசமைப்பின் மூலம் அதிக அதிகாரங்களை வழங்குவதற்கு இணங்குவார்கள்? நிச்சயம் அது நடக்கப் போவதில்லை. மேலும், "நீங்கள் செய்யத்தான் வேண்டும் இல்லையேல் விளைவுகள் மோசமடையும்", என்று எச்சரிப்பதற்கான வெளிச்சூழலும் இல்லை. இந்த நிலையில், புதிய அரசமைப்பு தொடர்பில் கருத்துகளை கூறுவோர் ஒன்றைப் புரிந்து கொள்ள முயற்சிக்க வேண்டும். தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஒருவேளை தங்களிடமுள்ள பெரும்பான்மையைக் கொண்டு, புதிய அரசமைப்பு ஒன்றை கொண்டுவரும் முயற்சியில் ஈடுபட்டால் நிச்சயம் மாகாண சபை முறைமையிலுள்ள அதிகாரத்தை மேலும் பலவீனப்படுத்தும் முயற்சியையே மேற்கொள்வர். ஏனெனில், ஒரு திறனுள்ள மாகாண சபையை அவர்கள் விரும்பவில்லை.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கமானது ஒருவேளை இந்த முயற்சிக்காக தமிழ் கட்சிகளிலுள்ள சில பாராளுமன்ற உறுப்பினர்களையும் வளைத்துப் போட முயற்சிக்கலாம். ஏற்கனவே, அதிக தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் அவர்களிடமுள்ள நிலையில் இன்னும் சிலரையும் இணைத்துக் கொண்டால் பெரும்பான்மையான தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய நகர்வை ஆதரிப்பதான ஒரு தோற்றத்தை ஏற்படுத்த முடியும். இந்த விடயம் தொடர்பில் கட்சிகள் தங்களின் வழமையான கறுப்பு வெள்ளை அரசியல் அணுகுமுறையை விடுத்து தூரநோக்குடனும் புத்திசாதுர்யமாகவும் விடயங்களைக் கையாள முயற்சிக்க வேண்டும்.

## கரையோர பகுதிகளில் 2,500இற்கும் மேற்பட்ட சட்டவிரோதக் கட்டுமானங்கள் அடையாளம்

கொழும்பு, ஜூன் 05

நாட்டின் கரையோர பகுதிகளில் 2,500க்கும் மேற்பட்ட சட்டவிரோத கட்டுமானங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகக் கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவ திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த சட்டவிரோத கட்டமைப்புகளை அகற்றும் செயல்முறை ஏலவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அந்த திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் டெர்னி பிரதீப் குமார தெரிவித்துள்ளார்.

சட்டத்தின்படி, கரையோரத்திலிருந்து 10 முதல் 25 மீற்றர் வரையிலான வலயத்துக்குள் எந்த கட்டுமானமும் அனுமதிக்கப்படாது.

இருப்பினும், பல்வேறு தரப்பினர் அண்மைய காலங்களில் இந்த விதிமுறைகளைப் புறக்கணித்து, கரையோர சூழலில் கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

## சைபர் பாதுகாப்பு சட்டத்தை விரைவாக சமர்ப்பியுங்கள்!

### ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 05

சைபர் பாதுகாப்பு என்பது பாதுகாப்பு அம்சத்துடன் மாத்திரம் தொடர்புப்பட்டதல்ல, நாட்டின் பொருளாதார விடயங்களுடன் தொடர்புடையது. சைபர் பாதுகாப்பு சட்டமூலத்தை வெகுவிரைவில் சபைக்கு சமர்ப்பிக்குமாறு நீதி அமைச்சரிடம் வலியுறுத்துகிறேன் என ஐக்கிய மக்கள் சக்தியின் களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன், 2022ஆம் ஆண்டு 09 ஆம் இலக்க தனிப்பட்ட தரவுப் பாதுகாப்பு சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ள அரசாங்கம் தீர்மானித்துள்ளமை வரவேற்கத்தக்கது. ஏன் சைபர் பாதுகாப்பு சட்ட வரைவு குறித்து கவனம் செலுத்தப்படவில்லை. சைபர் பாதுகாப்பு என்பது பாதுகாப்பு அம்சத்துடன் மாத்திரம் தொடர்புப்பட்டதல்ல, நாட்டின் பொருளாதார விடயங்களுடன் தொடர்புடையது.

நல்லாட்சி அரசாங்கத்தின் இறுதி காலப்பகுதியில் சைபர் பாதுகாப்பு சட்ட வரைவு தயாரிக்கப்பட்டது. இருப்பினும் இந்த சட்ட வரைவின் உள்ளடக்கங்கள் தற்போதைய பூகோள காரணிகளுக்கு பூரணமாக அமையாது. ஆகவே புதிய விடயங்களுடன் சைபர் பாதுகாப்பு சட்டவரைவினை தயாரித்து, சட்டமூலத்தை சபைக்கு சமர்ப்பிக்குமாறு நீதி அமைச்சிடம் வலியுறுத்துகிறேன்.

சமர்ப்பிக்கப்பட்டுள்ள தனிப்பட்ட தரவு பாதுகாப்பு (திருத்தச் ) சட்டமூலத்தில் ஒருசில குறைபாடுகள் இருப்பதை அவதானிக்க முடிகிறது. சட்டமூலத்தின் 13 ஆவது பிரிவில் "தரவு பாதுகாப்பு உத்தியோகத்தர்களை நியமிக்கும் போது அரச கூட்டுத்தாபனம் மற்றும் 2007ஆம் ஆண்டு 07 ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட நிறுவனங்கள் உள்ளடங்க கூடாது" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. - என்றார். (ஐ)

## பவுஸர் விபத்தில் சாரதி உயிரிழப்பு

கொழும்பு, ஜூன் 05

இயந்திர கோளாறால் வீதியை விட்டு விலகிய தண்ணீர் பவுஸர் விபத்துக்கு உள்ளானதில் அதனை செலுத்திச் சென்ற சாரதி உயிரிழந்தார்.

நேற்று புதன்கிழமை காலை இரத்தினபுரி இறக்குவானை பொத்துபிட்டி பிரதான வீதியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

வீதி திருத்தப் பணிகளுக்காக தண்ணீர் கொண்டு சென்ற பவுஸரே இவ்வாறு விபத்துக்கு உள்ளானது. இதில், பவுஸர் வாகனத்தை செலுத்திச் சென்ற அதே இடத்தை சேர்ந்த 67 வயது நபர் உயிரிழந்தார். (ஐ)

## இலஞ்சம் குறித்து முறையிட 1954 இலக்கத்தை அழையுங்கள்

கொழும்பு, ஜூன் 05

இலஞ்ச குற்றச்சாட்டுக்கள் தொடர்பான முறைப்பாடுகளை அளிப்பதற்கு 1954 என்ற அவசர தொலைபேசி இலக்கத்துக்கு தொடர்பு கொள்ளுமாறு பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

எவரேனும் உங்களிடமிருந்து இலஞ்சம் பெற்றுக் கொள்ள முயன்றால் அல்லது இலஞ்சம் வழங்க முயன்றால் மேற்குறிப்பிட்ட தொலைபேசி இலக்கத்துக்கு தொடர்பு கொள்ளுமாறு பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

பொதுமக்கள் அனைவரும் சமூக பொறுப்புடன் செயல்பட்டு இலஞ்சம் மற்றும் ஊழலை தடுப்பதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு பொலிஸார் கேட்டுள்ளனர்.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு






குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். அரசால் அனுகூலம் உண்டு. வழக்கில் நல்ல தீர்ப்பு வரும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். தொட்டது துலங்கும் நாள்.

பிள்ளைகளின் வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். வியாபாரத்தில் புதிய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். பெரிய பொறுப்புகள் தேடிவரும். நினைத்தது நிறைவேறும் நாள்.

மிதுனம்

அரசு அதிகாரிகளின் உதவியால் சில காரியங்களை முடிப்பீர்கள். மகளுக்கு நல்ல வரன் அமையும். வியாபாரத்தில் திடீர் லாபம் உண்டு. உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள்.

உடன்பிறந்தவர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந்துக் கொள்வார்கள். வியாபாரத்தில் அனுபவமிக்க வேலையாட்களை தேடுவீர்கள். சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். தைரியம் கூடும்.

இதுவரை இருந்த காரியத்தடைகள் நீங்கும். குடும்பத்தில் அமைதியான சூழல் நீங்கும். உறவினர்கள் மதிப்பார்கள். வியாபாரத்தில் லாபம் வரும். புது வாய்ப்புகள் தேடி வரும். நன்மை நடக்கும்.

கன்னி

ராசிக்குள் சந்திரன் இருப்பதால் பல வேலைகளையும் நீங்களே பார்க்க வேண்டி வரும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களுடன் சச்சரவு வரும். அலுவலக ரகசியங்களை வெளியிட வேண்டாம்.

சின்ன சின்ன வேலைகளையும் அலைந்து திரிந்து முடிக்க வேண்டி வரும். பிள்ளைகளால் டென்ஷன் அதிகரிக்கும். உத்தியோகத்தில் மற்றவர்களை விமர்சிக்க வேண்டாம். பொறுமைத் தேவையான நாள்.

வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும். பழைய கடன் பிரச்னை கட்டுப்பாட்டிற்குள் வரும். வியாபாரத்தில் புது உத்தியோகத்தில் அதிகாரிகள் முக்கிய அறிவுரைத் தருவார்கள். இனிமையான நாள்.

பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். உடன்பிறந்தவர்கள் ஒத்தாசையாக இருப்பார்கள். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். உங்களால் பயனடைந்தவர்கள் இப்போது உங்களுக்கு உதவி செய்வார்கள்.

மகரம்

கடந்த இரண்டு நாட்களாக கணவன் -மனைவிக்குள் இருந்த மோதல்கள் விலகும். பணவரவு திருப்தி தரும். வெளியூரிலிருந்து நல்ல செய்தி வரும். வியாபாரத்தில் போட்டிகள் குறையும்.

கும்பம்

சந்திராஷ்டமம் இருப்பதால் புதிய முயற்சிகள் தள்ளிப் போய் முடியும். தர்மசங்கடமான சூழ்நிலைகளில் அவ்வப்போது சிக்குவீர்கள். சக ஊழியர்களை குறை கூறிக் கொண்டிருக்க வேண்டாம்.

மீனம்

சவாலாக தெரிந்த சில வேலைகள் சாதாரணமாக முடியும். பிள்ளைகளால் அந்தஸ்து உயரும். வியாபாரத்தில் வேலையாட்களின் ஆதரவுக் கிட்டும். உத்தியோகத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும்.

# திருவள்ளுவரின் சிலை ஓமந்தையில் திறப்பு!

வவுனியா, ஜூன் 05

ஓமந்தை கிராம அலுவலர் வளாகத்திற்குள் திருவள்ளுவர் சிலை நேற்று புதன்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

கூமாங்குளம் கிராமஅலுவலர் நாகராஜா சிறீதரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் முதன்மை அதிதியாக கலந்துகொண்ட வவுனியா பிரதேச செயலாளர் இ. பிரதாபன் சிலையை திறந்து வைத்தார்.

அன்னம்மா அறக்கட்டளையின் 10ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அதன் நிறுவுநர் சிற்றம்பலம் கமலகண்ணன் இந்த சிலையை திறந்து வைத்தார்.



இந்த நிகழ்வில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் விரிவுரையாளர் கு. பாலஷண்குகன், தெற்கு பிரதேச சபையின் செயலாளர் சு. தெர்ஜனா, ஓமந்தை மத்திய கல்லூரி அதிபர் செ. பவேந்திரன், பாடசாலை மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

(ஐ)

# உதயசூரியன் சனசமூக நிலையத்தால் காங்கேசன் மக்களுக்கு குடிதண்ணீர்

யாழ்ப்பாணம், ஜூன் 05

காங்கேசன்துறை உதயசூரியன் சனசமூக நிலையத்தால் குடிதண்ணீர் தாங்கி அமைக்கப்பட்டு அந்தப் பகுதி மக்களுக்கு குடிதண்ணீர் விநியோகம் நடைபெறுகிறது.

காங்கேசன்துறையில் இருந்த நீர்த் தாங்கி போர் காலத்தில் முற்றாக அழிக்கப்பட்டது. இந்த நிலையில், மீளக்குடியேறிய மக்களுக்கு பிரதேச சபை குடிதண்ணீரை விநியோகித்து வந்தது. இந்த விநியோகமும் திடீரென நிறுத்தப்பட்ட நிலையில், அந்தப் பகுதி மக்கள் குடிதண்ணீரை பெறுவதில் சிரமங்களை எதிர்நோக்கினர்.

இந்த நிலையிலேயே, உதயசூரியன் சனசமூக நிலையத்தினரால் நீர்த்தாங்கி அமைக்கப்பட்டு, கடந்த மே 25ஆம் திகதி முதல் மக்களுக்கு குடிதண்ணீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. (ஐ-02)

# 11 பாடசாலைகளில் கட்டுமான பணியை மீள ஆரம்பிக்க அனுமதி

வவுனியா, ஜூன் 05

வன்னி மாவட்டத்தில் இடைநிறுத்தப்பட்டிருந்த 11 பாடசாலைகளின் மீள் கட்டுமாண பணிகளை மேற்கொள்ள கல்வி அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது என்று வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் தெரிவித்துள்ளார்.

பிரதமரும் கல்வி அமைச்சருமான கலாநிதி ஹரிணி அமரசூரிய தலைமையில் கல்வி அமைச்சு தொடர்பான பாராளுமன்ற ஆலோசனை குழுக் கூட்டத்தின் போதே குறித்த அனுமதி வழங்கப்பட்டதாக அவர் கூறினார்.

மீள்குடியேற்ற செயலணி ஊடாக 2018 மற்றும் 2019ஆம் ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்டு, இடைநிறுத்தப்பட்டிருந்த வன்னி மாவட்டத்தில் உள்ள 11 பாடசாலைகளின் மீள் நிர்மாணப் பணிகளை மீள ஆரம்பிக்குமாறு கல்வி அமைச்சரிடம் நான் கோரிக்கை முன் வைத்திருந்தேன். இதன்போது எனது கோரிக்கையை ஏற்று அதற்கான நிதி ஏற்பாடுகளை செய்து தருவதாக உறுதியளித்துள்ளார்.

இதன் மூலம் வன்னி மாவட்டத்தில் 11 பாடசாலைகளின் கட்டுமானப் பணிகள் மீள ஆரம்பிக்கப்படவுள்ளன - என்றார்.

(ஐ-10)

# இரத்த காயங்களுடன் இளைஞர் சடலமாக மீட்பு

வவுனியா, ஜூன் 05

இரத்தக் காயங்களுடன் சடலம் ஒன்றை தூக்கில் தொங்கிய நிலையில் வவுனியா பொலிஸார் நேற்று புதன்கிழமை மீட்டுள்ளனர்.

கத்தார்சின்னக்குளத்தை சேர்ந்த செல்லத்துரை கபிநாத் (வயது -24) என்ற ஒரு பிள்ளையின் தந்தையே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

சடலமாக மீட்கப்பட்ட இளைஞர் நேற்று முன்தினம் இளைஞர் குழு ஒன்றுடன் மோதலில் ஈடுபட்டார் என்றும் இந்த நிலையிலேயே அவர் நேற்றைய தினம் சடலமாக மீட்கப்பட்டார் என்று கூறப்படுகிறது.

இதேவேளை, இந்த மர்ம மரணம் தொடர்பில் இளைஞர்கள் இருவரிடம் வவுனியா குற்றத்தடுப்பு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-10)

# ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் உறுதியேற்பு

வவுனியா, ஜூன் 05

ஐக்கிய மக்கள் சக்தியின் வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபை உறுப்பினர்கள் நேற்றைய தினம் சத்திய பிரமாணம் செய்து கொண்டனர்.

ஐக்கிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட அமைப்பாளர் ரசிக்கா பிரியதர்சினியின் பணிமனையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி தேர்தலில் வவுனியா தெற்கு பிரதேச சபையில் நியமன உறுப்பினர்கள் உட்பட ஐக்கிய மக்கள் சக்திக்கு 3 உறுப்பினர்கள் கிடைக்கப்பெற்றன.



நேற்றைய சத்தியப்பிரமாண நிகழ்வில் கட்சியின் வவுனியா மாவட்ட முக்கியஸ்தர் கருணாதாச உட்பட பலர் கலந்து கொண்டனர்.

(ஐ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்கல்வி வாய்ப்பை விரிவுபடுத்தவேண்டும்

## ரவி கருணாநாயக்க கோரிக்கை

கொழும்பு, ஜூன் 05

**உயர்கல்வி வாய்ப்பை விரிவுபடுத்துமாறு எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.**

பாராளுமன்றம் நேற்று சபாநாயகர் தலைமையில் கூடியது. இதன்போது பிரதமரிடம் எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க இந்த வேண்டுகோளை முன்வைத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கையர் வெளிநாட்டிலிருந்து கொத்தல்லாவல, மொறட்டுவை யாழ்ப்பாணம் உள்ளிட்ட பல்கலைக்கழகங்களுக்கு விண்ணப்பித்து கல்வி பயில முடியும் அதேவேளை இலங்கை மாணவர்களால் செல்ல முடியவில்ல. இது அநீதியான விடயமல்லவா ? ஆகவே தான் நாம் மீண்டும் பரிசீலனைக்கு உட்படுத்தி நாட்டினுள் உயர் கல்வி வாய்ப்பை விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்க முடியாது . இந்த விடயம் நாட்டின் வருவாயில் அதிகரிப்பை ஏற்படுத்தவல்லதாகும். ஆகவே உயர்கல்வி வாய்ப்பை விரிவுபடுத்துமாறு தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். ஏனெனில் இலங்கை மாணவர்கள் வெளிநாட்டு பல்கலைக்கழகத்திற்கு அதிகளவு தொகை பணத்தை செலவிட்டுள்ளனர். அதுவும் அமெரிக்க டொலர்களில் பணம் செலுத்தியுள்ளனர். நாட்டில் எஞ்சியுள்ள வளங்களும் இத்தகைய நகர்வுகளின் காரணமாக இல்லாமல் போகும் நிலைமையே ஏற்படும்.

இதற்கு பதிலளித்த பிரதமர் ஹரிணி அமரசூரிய-

பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருநாணாயக்க எழுப்பும் கேள்வியில் முன்னுக்கு பின் முரணான விடயங்கள் உள்ளடங்கியள்ளன. கல்வியை வர்த்தக பொருளாக கையாள்வது ஒரு விடயம். மறுபுறம் நாட்டின்கல்வி ஊடாக மனித வளத்தை அபிவிருத்தி மட்டத்திற்கு இட்டுச்செல்வது மறு விடயமாகும்.



எம்முடைய அரசாங்கத்தின் கொள்கைக்கு அமைய உயர் கல்வியை விரிவாக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என எதிர்பார்க்கின்றோம். அதுவும் மாணவர்களுக்கு உயர் கல்வி தரமாகவும், அநீதியிழைக்கப்படாமலும் கிடைக்கப்பெற வேண்டும். பொருளாதார நிலைக்கு அமைய நாட்டின் உயர் கல்வியை தொடரும் வாய்ப்பு தீர்மானிக்கப்படல் முறையற்றதாகும். மாறாக உயர் கல்வித்துறைக்கான வாய்ப்பு விரிவாக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே நாம் உள்ளோம். ஆகவே அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன-என்றார்.

(அ)

# ஜனாதிபதி பணிமனைக்காக உள்ளக விவகார பிரிவு திறப்பு

கொழும்பு, ஜூன் 05

ஜனாதிபதி பணிமனையில் சேவைகளை வழங்குவது தொடர்பான விசாரணைகள் மற்றும் முறைப்பாடுகளை தெரிவிப்பதற்காக ஜனாதிபதி பணிமனை வளாகத்துக்குள் நிறுவப்பட்ட உள்ளக அலுவல்கள் பிரிவு ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவால் நேற்று திறந்துவைக்கப்பட்டது.



உள்ளக விவகார பிரிவு ஜனாதிபதி அலுவலகம் கொழும்பு 01 என்ற முகவரி அல்லது 011 235 4495 என்ற தொலைபேசி எண் மூலம் அல்லது 0716402654 வட்ஸ் அப் எண் மூலம் அல்லது iau@presidentsoffice.lk என்ற மின்னஞ்சல் முகவரி மூலம் முறைப்பாடுகள் அல்லது விசாரணைகளை தெரிவிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# ஜோன்ஸ்டனுக்கு எதிரான விசாரணை ஜூலை 07 இல்!

கொழும்பு, ஜூன் 05

முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மற்றும் இருவருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கை எதிர்வரும் ஜூலை 07 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ள கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சராக இருந்த காலத்தில், கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனத்தின் (ஊழியர்களை சட்டவிரோதமாக அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதன் மூலம் அரசாங்கத்திற்கு நிதி இழப்பு ஏற்படுத்தியதாக குற்றம் சாட்டி, இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணையகம் இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளது.

இந்த வழக்கு நேற்று கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆதித்யா படபெந்திகே முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

இதன்போதே மேற்கண்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

(அ)

# ஹர்ஷவின் எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 05

அரசாங்கத்தின் மெதுவான மூலதனச் செலவு குறித்து பொது நிதிக் குழுவின் தலைவர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா கவலை எழுப்பியுள்ளார். இது பொருளாதார வளர்ச்சி மற்றும் திட்டமிடப்பட்ட வளர்ச்சி இலக்குகளை குறைமதிப்புக்கு உட்படுத்தும் என்று எச்சரித்துள்ளார்.

ஹர்ஷ டி சில்வாவின் கூற்றுப்படி, இந்த ஆண்டு மூலதனத் திட்டங்களுக்காக அரசாங்கம் ரூ. 1.4 டிரில்லியன் நிதியை ஒதுக்கியுள்ள நிலையில், முதல் நான்கு மாதங்களில் ரூ. 136 பில்லியன் மட்டுமே - 10 வீதத்துக்கும் குறைவான - தொகையே செலவிடப்பட்டது.

தாமதத்திற்கு இரண்டு முக்கிய காரணங்களை அவர் மேற்கோள் காட்டினார். ஆரம்பத்தில் கணக்கெடுப்பு முறையை நம்பியிருப்பது, இது பெரிய திட்டங்களைத் தொடங்கவோ அல்லது கேள்விகோரல்களை விடவோ அரசாங்கத்தின் திறனைக் கட்டுப்படுத்தியது, மற்றும் ஒத்திவைக்கப்பட்ட தேர்தல்கள் காரணமாக உள்ளூர் அரசாங்கங்களுக்கு நிதி வழங்குவதில் தாமதம் ஏற்பட்டது.

தற்போதைய போக்குகள் தொடர்ந்தால், ரூ. 1.4 டிரில்லியனில் ரூ. 1.3 டிரில்லியன் செலவிடப்படாமல் இருக்கலாம் என்று அவர் கூறினார்.

எதிர்பார்த்ததை விட அதிகமான வரி வருவாய் முதன்மை இருப்பை சற்று உயர்த்தியிருந்தாலும், மூலதன முதலீட்டின் பற்றாக்குறை பொருளாதார வளர்ச்சியை மெதுவாக்கும் என்றும், கடந்த ஆண்டு காணப்பட்ட 5 வீத வளர்ச்சியை 3.2 வீதமாகக் குறைக்கக்கூடும் என்றும் ஹர்ச டி சில்வா எச்சரித்தார். (அ)

# தயாசிறி, உதய கம்மன்பில விரைவில் விசாரிக்கப்படுவர்



கொழும்பு, ஜூன் 05

தவறான தகவல்களைப் பரப்பியதற்காக பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர மற்றும் முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில ஆகியோர் விரைவில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரால் அழைக்கப்படுவார்கள் என்று நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

“வடமத்திய மாகாணத்தின் வாகன விற்பனை குறித்து பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி தவறான தகவல்களைக் கூறினார். பின்னர் வடமத்திய மாகாண ஆளுநர் சட்ட நடவடிக்கை எடுப்பதாக மிரட்டியபோது அவர் மன்னிப்பு கேட்டார். இதை ஏற்றுக்கொள்ள முடியாது,” என்று அமைச்சர் கூறினார்.

"எம்.பி.யின் செயல், ஒரு சீப்பு வாழைப்பழங்களைத் திருடி, அதைத் திருப்பிக் கொடுத்துவிட்டு, உரிமையாளரிடம் நடவடிக்கை எடுக்க வேண்டாம் என்று கேட்பது போன்றது” என கூறிய நீதி அமைச்சர், தயாசிறி மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று சுட்டிக்காட்டினார்.

கொள்கலன்களை அகற்றுவது தொடர்பாக கம்மன்பிலவுக்கு கிடைத்த தகவல்களின் அடிப்படையில் விரைவில் சி.ஐ.டியால் அவர் அழைக்கப்படுவார் என்றும் அவர் கூறினார்.

# முகக்கவசம் அணிய அறிவுறுத்தல்

கொழும்பு, ஜூன் 05

நாடு முழுவதும் இன்புளூவன்ஸா மற்றும் கொவிட் வைரஸின் மாறுபாடு உருவாகும் போக்கு இருப்பதாக சுகாதார சேவைகள் மேம்பாட்டு பணியகம் எச்சரித்துள்ளதால், அலுவலக வளாகங்களிலும் அனைத்து பொது இடங்களிலும் முகக்கவசங்களை அணியுமாறு தங்கள் ஊழியர்களுக்கு அறிவிக்குமாறு மேல் மாகாண தலைமைச் செயலகம் அரச நிறுவனங்களின் தலைவர்களுக்கு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக, மேல் மாகாணத்தின் பிரதிப் பிரதம செயலாளர் (நிர்வாகம்) பி.என். தம்மிந்த குமார கையொப்பமிட்ட கடிதம் மேற்கு மாகாணத்தில் உள்ள அரச நிறுவனங்களின் தலைவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. (அ)

### பல்கலைக்கழக அனுமதிக்காக

# 90,000 இற்கும் மேற்பட்டோர் ஒன்லைனில் விண்ணப்பம்

கொழும்பு, ஜூன் 05

அண்மையில் வெளியான உயர்தரப் பரீட்சை முடிவுகளின் அடிப்படையில், இந்த ஆண்டு பல்கலைக்கழக சேர்க்கைக்காக சுமார் 90,000 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் ஒன்லைனில் பதிவு செய்துள்ளதாக இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பதிவு காலம் மே 30 ஆம் திகதியுடன் அதிகாரப்பூர்வமாக முடிந்துள்ளது.

இருப்பினும், ஏற்கெனவே பதிவு செய்த மாணவர்கள் ஜூன் 13ஆம் திகதி வரை தங்கள் விருப்ப வரிசையை மாற்றிக் கொள்ள அனுமதிக்கப்படுகிறார்கள்.

இந்த சரிசெய்தலை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் வலைத்தளம் வழியாகச் செய்யலாம்.

தங்கள் விருப்பங்களைத் திருத்திக் கொள்ளும் மாணவர்கள் தங்கள் புதுப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தின் நகலை பதிவுத் தபால் மூலம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்ப வேண்டும் என்றும் இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

(அ)

# மாடியிலிருந்து விழுந்து குடும்பஸ்தர் உயிரிழப்பு

கொழும்பு, ஜூன் 05

வெள்ளவத்தையில் ஐந்தாவது மாடியில் இருந்து விழுந்த ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வெள்ளவத்தை, ராம கிருஷ்ணா பிளேஸில் உள்ள ஐந்து மாடிக் கட்டடத்தில் இருந்து விழுந்தவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக வெள்ளவத்தை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர் இரண்டு பிள்ளைகளின் தந்தையான இராசையா தவராசா (வயது-59) ஆவார். இவர் மட்டக்களப்பு இருதய புரத்தைச் சேர்ந்தவர்.

வெள்ளவத்தை ராம கிருஷ்ணா பிளேஸ் வணிக இல்லத்தில் காவலாளியாகவும், வீட்டுப் பணியாளராகவும் பணியாற்ற மூன்று ஆண்டுகளுக்கு முன்பு வந்த இவர்,

மேல் மாடியில் உள்ள நடைபாதைக்கு அருகில் மரக் கைப்பிடியால் செய்யப்பட்ட சாதனத்தைப் பயன்படுத்தி ஜன்னல் கண்ணாடிகளைச் சுத்தம் செய்து கொண்டிருந்தபோது, சமநிலையை இழந்து திடீரென கீழே விழுந்ததாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவ தொழில்வல்லுநர் சங்கம் இன்று முதல் பணிப்புறக்கணிப்பு!

## தீர்க்கப்படாத கோரிக்கைகளை முன்வைத்து

கொழும்பு, ஜூன் 05

**சுகாதாரத் துறை தொடர்பான பிரச்னைகள் உட்பட பல தீர்க்கப்படாத கோரிக்கைகளை முன்வைத்து, நிறைவுகாண் மருத்துவ தொழில் வல்லுநர் சங்கத்தினர் இன்று பணிப்பகிஷ்கரிப்பு போராட்டத்தை ஆரம்பிக்கவுள்ளதாக அறிவித்துள்ளனர்.**

இந்த விடயங்களைத் தீர்ப்பதை நோக்கமாகக் கொண்ட விவாதங்களில் ஈடுபடுவதை சுகாதார அமைச்சர் தொடர்ந்து தவிர்த்து வருவதாக நிறைவுகாண் மருத்துவ தொழில் வல்லுநர் சங்கத் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவித்தார்.

துணை மருத்துவ சேவைப் பணியாளர்களின் பதவி உயர்வு தொடர்பாக அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்ற எந்த உறுதியான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

அதன்படி, முறையான கலந்துரையாடல் நடத்தப்பட்டு, அவர்களின் பிரச்சினைகள் நிவர்த்தி செய்ய உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்படா விட்டால், வேலைநிறுத்தத்தை கைவிடப் போவதில்லை என்றும் அவர் வலியுறுத்தினார். (அ)

# பேனா வடிவில் துப்பாக்கி களுத்துறையில் சிக்கியது!

கொழும்பு, ஜூன் 05

பேனா வடிவில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் களுத்துறை குற்றத்தடுப்புப் பிரிவின் அதிகாரிகளால் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

களுத்துறை குற்றத்தடுப்புப் பிரிவு அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், பாணந்துறை ஹொரேத்துடுவ பாலம் அருகே சந்தேகத்துக்கிடமான முறையில் இருந்த நபர் ஒருவரை சோதனை செய்தபோது அவரை கைது செய்துள்ளனர்.

மொறட்டுவை, மோல்பே பகுதியைச் சேர்ந்த 43 வயதானவரே இவ்வாறு துப்பாக்கியுடன் கைது செய்யப்பட்டார்.

இதன்போது, குறித்த நபரின் சட்டைப் பையில் இருந்த இந்த வெளிநாட்டு தயாரிப்பு பேனா வடிவத் துப்பாக்கி மற்றும் அதற்கு பயன்படுத்தப்படும் தோட்டாக்களை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இது ஒரு வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி என்றும், அது செயல்படும் நிலையில் உள்ளது என்றும், கொலைக்கு மிகவும் சூட்சுமமாக பயன்படுத்தக்கூடிய ஆயுதம் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர், சுமார் நான்கரை அங்குல நீளம் கொண்ட இந்த துப்பாக்கியை ஏன் வைத்திருந்தார் என்பது குறித்து களுத்துறை குற்றத்தடுப்புப் பிரிவின் அதிகாரிகளால் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன. (அ)

# காஸா மனிதாபிமான நிலைமை இலங்கை அரசு ஆழ்ந்த கவலை

கொழும்பு, ஜூன் 05

காஸாவில் தற்போதைய மனிதாபிமான நிலைமை குறித்து இலங்கை அரசாங்கம் ஆழ்ந்த கவலையை வெளிப்படுத்தியுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் சாசனத்தின் விதிகள் மற்றும் தொடர்புடைய ஐ.நா. தீர்மானங்களின்படி, பலஸ்தீன மக்களின் அரச உரிமைக்கான இலங்கையின் அசைக்க முடியாத ஆதரவை அரசாங்கத்தின் சார்பாக வெளிவிவகார வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத் மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளார்.

இலங்கைக்கான பலஸ்தீன தூதர் இஹாப் கலீல், வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்தை அமைச்சு வளாகத்தில் சந்தித்தபோது இந்த விடயங்கள் தெரிவிக்கப்பட்டன.

1967 எல்லைகளின் அடிப்படையில் அருகருகே வாழும் இரு நாடுகளின் சர்வதேச அளவில் ஒப்புக்கொள்ளப்பட்ட அளவுருக்களுக்கு இணங்க பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண இலங்கை தொடர்ந்து உறுதி பூண்டுள்ளதாகவும், இது நீண்டகால பாதுகாப்பு, அமைதி மற்றும் செழிப்பை அடைவதற்கு முக்கியமாகும் என்றும் அமைச்சர் ஹேரத் கூறியுள்ளார்.

இந்தச் சந்திப்பின்போது, காஸாவின் நிலைமை குறித்து வெளிவிவகார அமைச்சருக்கு தூதுவர் விளக்கமளித்ததாகவும், இரு தரப்பு பிரச்னைகள் குறித்து விவாதித்ததாகவும் வெளியுறவு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சு ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

பலஸ்தீனப் பிரச்னையில் இலங்கையின் நிலைப்பாட்டுக்காகவும், பிராந்திய மற்றும் சர்வதேச மன்றங்களில் பலஸ்தீனத்துக்கு வழங்கப்பட்ட தொடர்ச்சியான ஒற்றுமை மற்றும் ஆதரவுக்காகவும் பலஸ்தீனத் தூதர் பாராட்டினார். (அ)

# மீன்களின் விலை எகிறியது!

கொழும்பு, ஜூன் 05

மீன்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளதால் தாங்கள் பெரும் சிரமங்களுக்கு முகங்கொடுத்துள்ளதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

மே மாதம் முதல் இருந்தே மீன்களின் விலைகள் அதிகரித்துள்ளது.

இதனால், மீன்களை கொள்வனவு செய்வோரின் எண்ணிக்கையும் குறைந்துள்ளது என மீன் வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

தற்போதைய மோசமான வானிலை மற்றும் பருவமழை காரணமாக கடல் கொந்தளிப்பாக இருப்பதாகவும் அதிகமான மீனவர்கள் கடலுக்குச் செல்வதில்லை என்றும், இதன் விளைவாக தேவையை பூர்த்தி செய்யும் அளவுக்கு மீன்கள் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் வியாபாரிகள் தெரிவிக்கின்றனர். (அ)

# சர்வதேச பாதுகாப்பு பல்கலையாக கொத்தலாவல மாற்றப்படவுள்ளது!



கொழும்பு, ஜூன் 05

ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் சர்வதேச பாதுகாப்பு பல்கலைக்கழகமாக மாற்றப்பட உள்ளதாக பிரதமர் ஹரிணிஅமரசூரிய நேற்று புதன்கிழமை பாராளுமன்றத்தில்தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த பிரதமர், ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தை சர்வதேச பாதுகாப்பு பல்கலைக்கழகமாக மாற்றுவதற்கான சட்ட சீர்திருத்தங்களை கொண்டுவர அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகக் கூறினார்.

இதுவே இந்த பல்கலைக்கழகத்தை அமைப்பதற்கு நிலத்தை நன்கொடையாக வழங்கிய மறைந்த பிரதமர் ஜோன் கொத்தலாவலவின் விருப்பம் என்றும் அவர் கூறினார்.

"முந்தைய அரசாங்கங்கள் தங்கள் விருப்பப்படி ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தை நடத்தி வந்தனர் என்றும் பிரதமர் மேலும் கூறினார். (அ)

# கொழும்பு மாநகர சபை மேயர் ஐக்கிய மக்கள் சக்திக்கு ஆதரவு

கொழும்பு, ஜூன் 05

கொழும்பு மாநகர மேயராக நியமிக்கப்படவுள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் அங்கத்தவர் ரீஸா சரூக்குக்கு ஏனைய கட்சிகளின் ஆதரவு கிடைக்கப்பெறும் என பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். (அ)

# பரிசோதனைக்கு அதிக தொகை அறவிடும் மருந்தகங்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை

கொழும்பு, ஜூன் 05

டெங்கு மற்றும் ஏனைய நோய் தொடர்பான பரிசோதனைகளுக்காகத் தற்போது அறவிடப்படும் கட்டணத்தைவிட அதிகத் தொகையை அறவிடும் மருந்தகங்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என நுகர்வோர் விவகார அதிகார சபையினர் தெரிவித்துள்ளனர்.

தற்போது இந்த பரிசோதனைகளுக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ள கட்டணத்தைவிட அதிக கட்டணம் கோரப்படுவதாகத் தமக்குத் தகவல் கிடைத்துள்ளதாக அந்த சபை குறிப்பிட்டுள்ளது.

இதன்படி, இரத்த பரிசோதனைகளுக்காக 400 ரூபாயும் டெங்கு நோய் குறித்த பரிசோதனைகளுக்காக 1,200 ரூபாயும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், மல்வானைப் பகுதியில் இயங்கும் மருந்தகம் ஒன்றில் இரத்த பரிசோதனைக்காக அதிகளவான கட்டணம் வசூலிக்கப்பட்ட நிலையில் அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குறித்த மருந்தகத்துக்கு 5 இலட்சம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது. (அ)

# ரணிலுக்கு எதிரான இரு மனுக்கள் மீதான விசாரணைக்கு உயர்நீதிமன்றம் அனுமதி!

கொழும்பு, ஜூன் 05

மதுபானச் சட்டத்தை மீறி நிதியமைச்சர் என்ற வகையில் மதுபானச்சாலை அனுமதிப்பத்திரங்களை வழங்கியதன் மூலம் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அடிப்படை உரிமைகளை மீறியுள்ளதாகத் தாக்கல் செய்யப்பட்ட இரண்டு மனுக்களை விசாரிக்க உயர் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

நீதியரசர்களான யசந்த கோதாகொட, ஜனக் டி சில்வா மற்றும் மஹிந்த சமயவர்தன ஆகியோர் அடங்கிய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் ஆயம் இந்த மனுக்களில் முன்வைக்கப்பட்ட விடயங்களைக் கருத்தில் கொண்டு குறித்த அனுமதியை வழங்கியது.

அத்துடன், கடந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் காலப்பகுதியில் வழங்கப்பட்ட மதுபானச்சாலை அனுமதிப்பத்திரங்கள் தொடர்பான தகவல்களை நீதிமன்றத்துக்கு சமர்ப்பிக்குமாறும் தற்போதைய மதுவரி ஆணையாளர் நாயகத்திற்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

மனுதாரர்கள் சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி, பிரதிவாதிகள் சட்டத்துக்குப் புறம்பாக மதுபானச்சாலை அனுமதிப்பத்திரங்களை வழங்கியுள்ளதாகவும், முன்னாள் இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டாரவின் 19 வயது மகனுக்கும் மதுபானச்சாலை அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி தேர்தலின் போது அரசியல் ஆதாயம் பெறும் மறைமுக நோக்கத்துடன் இவை வழங்கப்பட்டதாகவும், அவர் சுட்டிக்காட்டினார்.

சட்டமா அதிபர் சார்பில் முன்னிலையான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல், வழக்கு தொடர்பான சமர்ப்பணங்களை முன்வைத்திருந்த நிலையில், குறித்த வழக்கை எதிர்வரும் நவம்பர் 19 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ள மூவர் அடங்கிய நீதியரசர்கள் ஆயம் திகதியிட்டது. (அ)

# அரசாங்கத்துக்கு எதிரான பொதுமுன்னணி வேண்டும்

## தயாசிறி ஜயசேகர கோரிக்கை

கொழும்பு, ஜூன் 05

அனைத்து எதிர்க்கட்சியினரையும் இணைத்துக் கொண்ட முன்னணி ஒன்றை உருவாக்க வேண்டியது அவசியம் என பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

கிருலப்பனையில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-புதிதாக அமையப்பெறவுள்ள முன்னணியில் ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாஸ, நாமல் ராஜபக்ஷ அடங்கலான எதிர்க்கட்சி தரப்பினர் உள்ளடங்கவேண்டும்.ஒவ்வொருவருக்கும் மாறுபட்ட கருத்து வேறுபாடுகள் இருக்கலாம்.

பிளவுகள் காணப்படலாம். ஒவ்வொரு கொள்கைகள் காணப்படலாம். ஆனால் இந்த அரசாங்கத்தின் ஒடுக்கு முறைக்கு எதிராக குரல் கொடுப்பதற்காக குறித்த முன்னணி அமைக்கப்படவேண்டும் இந்த செயற்பாட்டை மேற்கொள்வதற்காக நிச்சயமாக நாங்கள் பாடுபடுவோம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் ஜனாதிபதி நிதிய பயனாளிகள் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு திட்டம்!

## எதிர்வரும் 21 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் பயிற்சி நிகழ்வு

கொழும்பு, ஜூன் 05

**வடக்கு மாகாணத்தில் ஜனாதிபதி நிதிய பயனாளிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.**

பிரதேச செயலகங்களுக்கு ஜனாதிபதி நிதியத்தின் செயல்பாடுகள் விரிவாக்கப்பட்டதன் மூலம், அதில் கோரப்படும் மருத்துவ உதவிக்கான விண்ணப்பங்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளன.

அதேநேரத்தில், புதிய கணினி அடிப்படையிலான செயன்முறை குறித்து பிரதேச செயலகங்களின், உரிய விடயத்துடன் தொடர்புடைய ஊழியர்களுக்கு, தெளிவூட்டுவதும் பயிற்சி அளிப்பதும் அவசியமாகியுள்ளது.

அதன் ஒரு அங்கமாக, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களின் பிரதேச செயலாளர்கள் மற்றும் ஜனாதிபதி நிதியம் தொடர்பாக செயலாற்றும் அதிகாரிகளுக்கு, எதிர்வரும் 21 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் பயிற்சி நிகழ்வு மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்த திட்டத்தின் மூலம், வடக்கு மாகாணத்தில் ஜனாதிபதி நிதிய பயனாளிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவும், பயனாளிகளுக்கு உயர்தர சேவையை வழங்கவும், நவீனமயமாக்கப்பட்ட ஒன்லைன் அமைப்புகளை அறிமுகப்படுத்தவும், மேலும் சேவைகளை விரைவாக வழங்கவும் எதிர்பார்க்கப்படுகிறது.

கொழும்பை மையமாகக் கொண்ட ஒரு குறிப்பிட்ட அளவிலானவர்களுக்கு மட்டும் நன்மைகளை வழங்கிய ஜனாதிபதி நிதியத்தை, நாடு முழுவதும் வாழும் மக்களுக்கு நன்மைகளை வழங்கும் மக்கள் நிதியமாக செயல்படுத்துவதே தற்போதையஜனாதிபதி தலைமையிலான பணிக்குழுவின் முதன்மையான நோக்கமாகும்.

அந்த நோக்கத்தை அடைய, எதிர்காலத்தில் இது போன்ற பயிற்சித் திட்டங்கள் ஏனைய மாகாணங்களிலும் செயல்படுத்தப்படும் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (அ)

# நாட்டில் எச்.ஐ.வி. பரவல் மிகக்குறைந்த மட்டத்தில்!

கொழும்பு, ஜூன் 05

அரசாங்கத்தின் ஆதரவை தாண்டி அரசுசாரா நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட ஆதரவு நாட்டின் சுகாதார அமைப்பை சிறந்த முறையில் பராமரிக்க உதவியுள்ளது என சுகாதார பிரதி அமைச்சர் வைத்தியர் ஹன்சக விஜேமுனி தெரிவித்துள்ளார்.

சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சால் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையில் இவ்விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாலியல் உரிமைகள் தொடர்பான ஐரோப்பிய பாராளுமன்றத்தின் பிரதிநிதிகள் சார்பாக இலங்கை குடும்பக்கட்டுப்பாட்டுச் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வு கொழும்பில் உள்ள கிங்ஸ்பரி ஹோட்டலில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதிஅமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-ஆசியாவில் எச்.ஐ.வி பரவல் மிகக் குறைந்த மட்டத்தில் இருக்கும் நாடாக இலங்கையைக் கருதலாம், குறிப்பாக நாட்டின் மக்கள் தொகையுடன் ஒப்பிடும்போது எச்.ஐ.வி. யுடன் வாழும்மக்களின் எண்ணிக்கையைக் கருத்தில் கொள்ளும்போது இது மிகக் குறைவாக இருப்பது பாராட்டத்தக்கது.

சுகாதார அமைச்சின் வழிகாட்டலில் இலங்கை தேசிய பாலியல் நோய் மற்றும் எயிட்ஸ் கட்டுப்பாட்டுத்திட்டத்தால் செயற்படுத்தப்படும் சிறப்புத் திட்டங்களுக்கு மேலதிகமாக, இலங்கை குடும்பக் கட்டுப்பாட்டுச் சங்கத்தால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளும் மிகமுக்கியமான காரணிகளாகும்.

தற்போதைய அரசாங்கத்தால் செயற்படுத்தப்படும் சிறப்புத் திட்டத்தை மேலும் வலுப்படுத்த சுகாதார அமைச்சு தீவிரமாக பங்களித்து வருகின்றது. -என்றார். (அ)

# துசித ஹல்லொலுவவுக்கு விளக்கமறியல் நீடிப்பு!

கொழும்பு, ஜூன் 05

2017 முதல் 2019 வரை தேசிய லொத்தர் சபையின் நிர்வாக இயக்குநராகப் பணியாற்றிய துசித ஹல்லொலுவ மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அவரை எதிர்வரும் 6 ஆம் திகதி வரை தொடர்ந்து விளக்கமறியலில்வைக்குமாறு கோட்டை பிரதான நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.



தேசிய லொத்தர் சபைக்கு சொந்தமான அரசு சொத்துக்களை முறைகேடாகப் பயன்படுத்தியதாக தாக்கல் செய்யப்பட்ட வழக்குக்கு அமையவே இவ்வாறு துசித ஹல்லொலுவ விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (அ)

# மர ஆலை ஒன்றில் தீ விபத்து

கொழும்பு, ஜூன் 05

பிலியந்தலை, போகுந்தர பகுதியில் அமைந்துள்ள மர ஆலை ஒன்றில் நேற்று தீ விபத்து ஏற்பட்டது.

இந்த மர ஆலை பிலியந்தலை - கொழும்பு பிரதான வீதியில் அமைந்துள்ளது.

தெஹிவளை, கல்கிஸ்ஸை மாநகர சபையின் நான்கு தீயணைப்பு வாகனங்கள் மற்றும் பல தீயணைப்பு வீரர்கள் தீயை அணைக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.

கொழும்பு மாநகர சபையின் தீயணைப்பு படையினரின் உதவியைப் பெறவும் நடவ டிக்கை எடுக்கப்பட்டுள்ளது.தீ விபத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்பட வில்லை. (அ)

# கல்வித்துறைக்கான செயலணியை உருவாக்க அமைச்சரவை அனுமதி

கொழும்பு, ஜூன் 05

கல்வித்துறை டிஜிற்றல் மாற்றத்திற்கான செயலணி யொன்றை உருவாக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ இதனை தெரிவித்தார்.அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கையில் மாணவர்களை பாடசாலைகளுக்கு உள்வாங்கல் மற்றும் தரப்பண்பான கல்வியை வழங்குவதில் சிறந்த முன்னேற்றங்கள் அடையப்பெற்றுள்ளது.

ஆனாலும்,தற்போது 42,000 இற்கும் மேற்பட்ட ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுவதும், கிராமிய மற்றும் குறைந்த வசதிகளைக் கொண்ட பிரதேசங்களில் அதிகரித்து வருகின்ற ஏற்றத்தாழ்வுகளாலும் கல்வித்துறை பெரும் அழுத்தத்திற்கு உள்ளாகியுள்ளது.

இந்நிலைமையின் கீழ் கல்வித்துறையில் முறைமை ரீதியான மாற்றமொன்றை அறிமுகப்படுத்த வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது.

பெரும்பாலான நாடுகள் தமது கல்வி முறைமைகளில் புரட்சிகர மாற்றங்களை ஏற்படுத்துவதற்காக டிஜிற்றல் அனுகூலங்களை வினைத்திறனாகப் பயன்படுத்துகின்றன.

இலங்கையிலும் பல்வேறு டிஜிற்றல் கல்விக்கான தொடக்க முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பினும், அவை முறையாகக் கட்டமைக்கப்படாமையால் எதிர்பார்க்கப்படும் பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்ள முடியாமல் போயுள்ளது.

அதனால், சமகால கல்வி மறுசீரமைப்பு மற்றும் அதனுடன் இணைந்துள்ள மூலோபாய டிஜிற்றல் அணுகுமுறையொன்றை நடைமுறைப்படுத்துவது அவசியமாகும்.

அதற்குத் தேவையான படிமுறைகளை மேற்கொள்வதற்காக பிரதமரின் செயலாளர்



தலைமையில் மற்றும் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் டிஜிட்டல் பொருளாதார அமைச்சின் செயலாளரின் அங்கத்துவத்துடனும், ஏற்புடைய ஏனைய பங்காளர்களுடன் கூடிய கல்வித்துறை டிஜிற்றல் மாற்றம் பற்றிய செயலணியை நிறுவுவதற்காக கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சரான பிரதமர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது-என்றார். (அ)

# கொள்முதல் செயல்முறை ஊடாகவே மருந்து கொள்வனவு செய்யவேண்டும்

## எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கை

கொழும்பு, ஜூன் 05

கொள்முதல் செயல்முறை ஊடகவே மருந்துகளை கொள்முதல் செய்யவேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-கொள்முதல் செயல்முறையின் கீழ் மருந்துகளை கொள்முதல் செய்வது நிறுத்தப்பட்டுள்ளது. முறையாக கொள்முதல் செய்ய முடியுமாக இருக்கத்தக்க மறை கரமொன்றின் நடவடிக்கை அல்லது வேறு சில காரணங்களால் இது நிறுத்தப்பட்டுள்ளது. எனவே, சம்பந்தப்பட்ட வைத்தியசாலையின் பிரதம மருத்துவர்களுக்கு கொள்முதல் செயல்முறைக்கு புறம்பாக மருந்துகளை கொள்முதல் செய்ய முடியும். எனவே இந்த விவகாரம் குறித்து ஆராய்ந்து பார்க்குமாறு நான் கோரிக்கை விடுக்கிறேன்.

மேலும், கொள்முதல் செயல்முறையை வேண்டுமென்றே தடுத்து, மருந்துப் பதிவுகள் தொடர்பான சிக்கல்களை உருவாக்கி, கொள்முதல் செயல்முறைகளுக்கு புறம்பாக,



விருப்பப்படி கொள்முதல் செய்யும் நடைமுறை இப்போதும் கடந்த காலங்களிலும் நடைமுறையில் இருந்து வருவதால், இது குறித்து ஆராய்ந்து பார்க்குமாறு வேண்டிக் கொள்கிறேன்-என்றார். (அ)

# கொழும்பு மாநகர சபையின் முதல் அமர்வு 16ஆம் திகதி

கொழும்பு, ஜூன் 05

கொழும்பு மாநகர சபையின் முதலாவது அமர்வு எதிர்வரும் 16 ஆம் திகதி நடைபெறும் என அறிவித்து அதற்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

குறித்த வர்த்தமானி அறிவிப்பு, மேல் மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் சாரங்கிகா கல்ஹாரி ஜயசுந்தரவால் வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி, கொழும்பு மாநகர சபையின் கன்னி அமர்வு ஜூன் 16 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.


நகர சபை மண்டபத்தில் நடைபெறும் கூட்டத்தில் புதிய மாநகரசபை மேயர் மற்றும் பிரதி மாநகர சபை மேயர் தேர்ந்தெடுப்படவுள்ளனர்.

உள்ளூராட்சி மன்ற தேர்தலில் கொழும்பு மாநகர சபையில் எந்தக் கட்சியும் முழுமையான பெரும்பான்மையைப் பெறாத நிலையில், தேசிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி ஆகிய இரண்டும் மாநகரசபை மேயரைத் தேர்ந்தெடுப்பதற்கு பிற அரசியல் குழுக்களின் ஆதரவைப் பெற்றுள்ளதாக அறிவித்துள்ளன. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடற்படையின் துப்பாக்கிசூட்டில் மீனவ இளைஞர் ஒருவர் படுகாயம்

## குச்சவெளி மக்கள் ஆர்ப்பாட்டம்




திருகோணமலை, ஜுன் 05

கடற்படையினரின் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி மீனவர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். திருகோணமலை - குச்சவெளி கடல் பரப்பில் நேற்ற முன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதில், குச்சவெளி - ஜாயாநகர் கிராமத்தை சேர்ந்த 23 வயது இளைஞரே படுகாயமடைந்தவராவார்.

குச்சவெளி கடற்பரப்பில் மீனவர்கள் சுருக்குவலையை பயன்படுத்தி மீன்பிடித்துள்ளனர். இந்த நிலையில், அவர்களை படகு மற்றும் சுருக்கு வலைகளுடன் கடற்படையினர் கைது செய்தனர். இதன்போதே, துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று கூறப்படுகிறது.

துப்பாக்கிச்சூட்டு சம்பத்தில் காயமடைந்த இளைஞர் திருகோணமலை பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்த சம்பவத்தையடுத்து குச்சவெளி பகுதியில் பதற்றம் ஏற்பட்டது. அத்துடன், நேற்றைய தினம் கிராம மக்கள் ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)



# குற்றத்தடுப்பு பிரிவின் கிழக்கு பணிமனை திறப்பு

காரைதீவு, ஜுன் 05

குற்றத்தடுப்பு பிரிவின் கிழக்கு மாகாண பணிமனை மட்டக்களப்பில் நேற்றுமுன் தினம் திறந்து வைக்கப்பட்டது.

பதில் பொலிஸ் மா அதிபர் சட்டத்தரணி பிரியந்த வீரசூரிய இந்த பணிமனையை திறந்து வைத்தார். இதில், கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் வர்ண ஜெயசுந்தரவும் கலந்துகொண்டார்.

கிழக்கு மாகாண குற்றப்பிரிவின் பொறுப்பதிகாரியாக பொலிஸ் பரிசோதகர் தெய்வநாயகம் மேனன் பதில் பொலிஸ் மா அதிபரால் நியமிக்கப்பட்டுள்ளார். நேற்று முன்தினம் அவர் புதிய பணிமனையில் கடமைகளை பொறுப்பேற்றார். (ஐ)

# மீனவர் மீதான துப்பாக்கிச்சூடு; அறிக்கை கோரினார் அமைச்சர்!

கொழும்பு, ஜுன் 05

குச்சவெளி சம்பவம் தொடர்பில் முழுமையான விசாரணைகளை முன்னெடுத்து கூடிய விரைவில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு கடற்படையினருக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் இந்த பணிப்புரையை விடுத்துள்ளார்.

சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையும் தவறு, துப்பாக்கிச்சூடு நடத்துவதும் தவறு, அதற்கு ஏதுவான சூழ்நிலையை உருவாக்குவதும் தவறு. எனவே, அறிக்கை கிடைத்த பின்னர் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

சுருக்குவலை மீன்பிடியில் ஈடுபட்ட மீனவர்கள் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர். இதைத் தொடர்ந்து கடற்படையினரின் துப்பாக்கிச்சூட்டில் இளைஞர் ஒருவர் காயமடைந்தார். இந்த சம்பவம் தொடர்பில் கடற்றொழில் அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டதையடுத்தே அவர் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார். (ஐ)

### உணவு ஒவ்வாமை காரணமாக

# மட்டு. நகரின் இரு பாடசாலைகளின் 86 மாணவர்கள் மருத்துவமனையில்!

மட்டக்களப்பு, ஜுன்

மட்டக்களப்பு நகரின் இரண்டு பாடசாலைகளை சேர்ந்த 86 மாணவர்கள் உணவு ஒவ்வாமையால் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பாடசாலை இடைவேளையின்போது சிற்றுண்டிச்சாலையில் வாங்கிய உணவை உட்கொண்ட மாணவர்களே வாந்தி, தலைசுற்று ஏற்பட்டதையடுத்து மட்டக்களப்பு போதான மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவை தொற்றா நோய்கள் பிரிவின் மருத்துவ அதிகாரி எஸ். உதயகுமார் சம்பவம் நடந்த பாடசாலைகளுக்கு உடனடியாக சென்று விசாரணைகளை நடத்தினார்.

இரு பாடசாலைகளுக்கும் சிற்றுண்டிகளை ஒரு நபரே விநியோகித்துள்ளார் என்று முதல் கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

சிற்றுண்டிசாலைகளின் உணவு மாதிரிகள் பெறப்பட்டு பகுப்பாய்வுக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ஐ)

# உலக சுற்றுச்சூழல் வாரம் திருமலையில் நடைபவனி

திருகோணமலை, ஜுன் 05

உலக சுற்றுச்சூழல் வாரத்தை முன்னிட்டு பிளாஸ்ரிக் மாசுபாட்டை முடிவுக்கு கொண்டு வருதல் எனும் தொனிப்பொருளில் திருகோணமலை கூட்டுறவு உதவி ஆணையாளர் பணிமனையும் திருகோணமலை பல நோக்கு கூட்டுறவுச் சங்கமும் இணைந்து நேற்று புதன்கிழமை விழிப்புணர்வு நடைபவனி ஒன்றை முன்னெடுத்தனர்.

திருகோணமலை நகரிலுள்ள கூட்டுறவு உதவி ஆணையாளர் பணிமனையில் ஆரம்பமான நடைபவனி, பிரதான வீதி, கடல் முக வீதி, மின்சார நிலைய வீதியினூடாக மீண்டும் பணிமனையை சென்றடைந்தது.



இதன்போது "இயற்கையை நேசிப்போம் அதை மனிதருக்கு போதிப்போம்", "வளமான பூமியே மனிதருக்கு வளம் தரும் சுவாமி", போன்ற வாசகங்கள் அடங்கிய பதாதைகளை ஏந்தியவாறு நடைபவனியில் பலரும் பங்கேற்றனர். (ஐ)

# கதிர்காம யாத்திரிகர்களுக்கு பாதபூசை செய்து வரவேற்பு!

## காரைதீவு மக்கள் அளித்தனர்



காரைதீவு, ஜுன் 05

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்திலிருந்து கதிர்காமத்துக்கு பாத யாத்திரை செல்லும் பக்தர்களுக்கு காரைதீவு மக்கள் பாத பூசை செய்து பெரும் வரவேற்பு அளித்தனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து ஆரம்பமான பாத யாத்திரை 34ஆவது நாளான நேற்று முன்தினம் அம்பாறை - காரைதீவை அடைந்தது. இதன்போது, மக்கள் மஞ்சள் நீரால் யாத்திரை குழுவினரின் பாதங்களை கழுவி வரவேற்றனர்.

பாதயாத்திரை குழுவின் ஆலோசகர் வி.ரி.சகாதேவராஜா தலைமையில் இந்த நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது. (ஐ)

# செங்கலடி பிரதேச சபை தவிசாளர் தெரிவில் நீடிக்கும் குழப்ப நிலைமை

## தமிழ் அரசின் மாவட்ட கிளை கூடி ஆராய்வு

மட்டக்களப்பு, ஜுன் 05

செங்கலடி பிரதேச சபையின் தவிசாளராக யாரை நியமிப்பது என்பது தொடர்பில் மட்டக்களப்பில் நடைபெற்ற தமிழ் அரசுக் கட்சியின் மாவட்டக் கிளை கூட்டத்தில் கலந்தாலோசிக்கப்பட்டது.

செங்கலடி பிரதேச சபையில் இலங்கை தமிழ் அரசுக் கட்சி 13 ஆசனங்களை கைப்பற்றியது. எனினும், அந்தக் கட்சி அங்கு ஆட்சியமைக்க 5 ஆசனங்கள் தேவைப்படுகின்றன.

எனினும், செங்கலடி பிரதேச சபையில் தமிழ் அரசுக் கட்சி [illegible] நிலாந்தன் ஆகியோர் [illegible] பெரும்பான்மையை நிரூபிக்கிறார்களோ அவருக்கு தவிசாளர் பதவியை வழங்க தீர்மானம் எட்டப்பட்டிருந்தது.

இந்நிலையில், நிலாந்தன் பெரும்பான்மையை நிரூபித்திருந்தார். இந்த நிலையில், கட்சியின் மாவட்ட கிளை முரளிக்கு மேலும் ஒரு சந்தர்ப்பத்தை வழங்கியுள்ளது. இதன்படி, அவர் எழுத்துமூலமாக பெரும்பான்மையை காட்டாது விடின் நிலாந்தன் சபையின் தவிசாளராக நியமிக்கப்படுவார் என்று கூறப்படுகிறது. (ஐ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உணவு பொருள் பெறச்சென்றோர்மீது இஸ்ரேல் படைகள் மீண்டும் தாக்குதல்!



## 27 பேர் உயிரிழப்பு

காசா, ஜூன் 05

**உணவுப் பொருட்களை பெறுவதற்காக இஸ்ரேல் நடத்தி வரும் உதவி மையத்துக்கு சென்றவர்கள்மீது மீண்டும் இஸ்ரேல் படைகள் தாக்குதல் நடத்தியுள்ளன. இதில், குறைந்தது 27 பேர் உயிரிழந்தனர். 34 பேருக்கும் அதிகமானோர் காயமடைந்தனர் என்று கூறப்படுகிறது.**

காசாவின் மேற்கு ரஃபாவில் உதவிக்காக காத்திருந்த பொது மக்கள் கூட்டத்தின்மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. ட்ரோன்கள், ஹெலிகொப்டர்கள், டாங்கிகளின் மூலம் இந்தத் தாக்குதலை இஸ்ரேல் படைகள் நடத்தியுள்ளன என்று ஹமாஸ் அமைப்பின் சிவில் பாதுகாப்பு அமைப்பின் செய்தி தொடர்பாளர் மஹ்மூத் பாசல் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, இந்தத் தாக்குதல் குறித்து நேரில் கண்ட ஒருவர் பி. பி. சிக்கு தகவல் அளிக்கையில்,

"அமெரிக்க குழு மூலம் எங்களுக்கு உதவி கிடைக்கும் என்று இஸ்ரேலிய இராணுவம் எங்களுக்கு தெரிவித்தது. நாங்கள் வந்தபோது, சோதனைச் சாவடி காலை ஆறு மணிக்குத் திறக்கப்பட்டது. திடீரென்று, எல்லா திசைகளிலிருந்தும் துப்பாக்கிச் சூடுகள் வெடித்தன. ஏராளமானோர் காயமடைந்தனர் அல்லது கொல்லப்பட்டனர், காட்சி பயங்கரமாக இருந்தது. நாங்கள் 200 மீற்றர் தூரம் நகர்ந்த பிறகு, துப்பாக்கிகள் எங்களை நோக்கிச் சுடத் தொடங்கின" - என்றார்.

இதேவேளை, கடந்த ஞாயிற்றுக்கிழமையும் உதவி மையத்துக்கு உணவுப் பொருட்களை பெறச் சென்ற மக்கள்மீது இஸ்ரேல் படைகள் தாக்குதல் நடத்தின. இதில், 31 பேர் கொல்லப்பட்டனர். 200இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ரிக்ரொக் மூலம் பிரபலமான சனா யூசுப் சுட்டுக் கொலை

## கௌரவ கொலை என்று சந்தேகம்



இஸ்லாமாபாத், ஜூன் 05

பாகிஸ்தானில் ரிக்ரொக் மூலம் பிரபலமான 17 வயதான சனா யூசுப் என்பவர் சுட்டுக் கொல்லப்பட்டர்.

இஸ்லாமாபாத்தில் உள்ள அவரின் வீட்டுக்குள் நுழைந்த நபர் ஒருவர் அவரை சுட்டுக் கொன்றுவிட்டு தப்பிச் சென்றுள்ளார்.

பாகிஸ்தானின் கைபர் பக்துன்க்வா மாகாணத்தை சேர்ந்த சனாவுக்கு ரிக்ரொக்கில் காணொலிகளை வெளியிட்டு வருகிறார். 5 இலட்சம் பேர் அவரை பின்தொடர்பவர்களாக உள்ளனர். சமூக ஊடகங்களில் தீவிர ஈடுபாட்டிலிருந்த சனாவுக்கு உறவினர்களிடையே கடும் எதிர்ப்பு இருந்ததாகக் கூறப்படுகிறது. இதனால், இது ஒரு கௌரவ கொலையாக இருக்கலாம் என்றும் கூறப்படுகிறது.

இதேசமயம், குவெட்டா பகுதியை சேர்ந்த ஹிரா என்ற 15 வயது சிறுமி சில மாதங்களின் முன்னர் சுட்டுக் கொல்லப்பட்டார். ரிக்ரொக்கில் தீவிரமாக இருந்தமைக்காக அவரின் தந்தை மற்றும் மாமனால் அவர் கௌரவ கொலை செய்யப்பட்டார். இதேபோன்று கந்தீல் பலோச் என்ற பெண்ணும் அவரின் சகோதரரால் கழுத்து நெரித்துக் கொலை செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஐ. நா. பொது சபையின் தலைவராக அன்னலெனா



நியூயோர்க், ஜூன் 05

ஐக்கிய நாடுகள் (ஐ. நா.) பொதுச் சபை தலைவராக ஜேர்மனியின் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் அன்னலெனா பேர்பாக் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

80ஆவது தலைவராக தெரிவாகியுள்ள இவர், எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் கூடவுள்ள பொதுச் சபைக்கு தலைமை தாங்குவதுடன், ஓர் ஆண்டுக்கு இந்தப் பொறுப்பில் அவர் நீடிப்பார்.

ஐ. நா. பொதுச் சபையின் தற்போதைய தலைவராக மத்திய ஆபிரிக்க நாடான கமரூனின் முன்னாள் பிரதமர் பிலமோன் யாங்க் உள்ளார்.

தலைமை பொறுப்பு தொடர்பில் அன்னலெனா பேர்பாக் கூறுகையில்,

"நான் நன்றியுள்ளவளாக இருப்பேன். பெரும்பான்மையான உறுப்பு நாடுகள் எனக்கு ஆதரவாக வாக்களித்துள்ளன. மேலும் இந்த சவாலான காலங்களில் அனைத்து உறுப்பு நாடுகளுடனும் இணைந்து பணியாற்ற நான் ஆவலுடன் காத்திருக்கிறேன்", என்றார். (ஐ)

# ஆபத்தான நோய் கிருமியை கடத்திய இரு சீனர்கள் கைது!

## அமெரிக்கா அறிவிப்பு

வாஷிங்டன், ஜூன் 05

ஆபத்தான உயிரியல் நோய் கிருமியை கடத்திய குற்றச்சாட்டில் சீனாவை சேர்ந்த 2 ஆராய்ச்சியாளர்களை அமெரிக்கா கைது செய்துள்ளது. இவர்களின் கைதை எவ். பி. ஐ. இயக்குநர் காஷ் பட்டேல் உறுதிப்படுத்தியுள்ளார்.

அமெரிக்காவின் மிக்சிகன் பல்கலைக்கழகத்தில் சீனாவை சேர்ந்த யுன்கிங் ஜியான் என்பவர் பணியாற்றி வருகிறார். இந்த நிலையில், ஜியானின் காதலரும் சீன ஆராய்ச்சியாளருமான ஜூன்யோங் லியு அமெரிக்கா வந்துள்ளார்.

அப்போது அவர் புசேரியம் கிராமினேரம் என்ற உயிரியல் நோய்க் கிருமியை அமெரிக்காவுக்கு கடத்தி வந்துள்ளார். இந்த நோய் கிருமியை மிச்சிகன் பல்கலைக்கழக ஆய்வகத்தில் ஆய்வு செய்து அதை மேலும் பெருக்க திட்டமிட்டுள்ளனர் என்று கூறப்டுகிறது.

இந்த நோய்க் கிருமி விவசாயத்தை அழிக்கவல்லது என்று கூறப்படுகிறது. புசேரியம் கிராமினேரமின் நச்சுகள் மனிதர்கள், கால்நடைகளின் கல்லீரலை பாதிக்கும். அத்துடன், இனப்பெருக்க ஆற்றலையும் பாதிக்கும் என்று கூறப்படுகிறத.

இது குறித்து எவ். பி. ஐ. பணிப்பாளர் காஷ் பட்டேல் கூறுகையில், "யுன்கிங் ஜியான் என்பவர் தான் பணிபுரியும் மிச்சிகன் பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சி செய்வதற்காக புசாரியம் கிராமிநேரம் என்ற ஆபத்தான பூஞ்சையை அமெரிக்காவுக்குள் கடத்தியுள்ளார். இந்த பூஞ்சை கோதுமை, பார்லி, சோளம், அரிசி விளைச்சலில் கடும் பாதிப்பை ஏற்படுத்தும்.

இது ஒவ்வோர் ஆண்டும் உலகளவில் கோடிக்கணக்கான டொலர்கள் பொருளாதார இழப்புகளை ஏற்படுத்திவிடும். ஜியானின் காதலன் சீனாவில் உள்ள ஒரு பல்கலைக்கழகத்தில் பணிபுரிகிறார். அங்கு அவர் இந்த நோய்க் கிருமி குறித்து ஆராய்ச்சி நடத்துகிறார்.

முதலில் குற்றச்சாட்டை மறுத்த அவர் பின்னர் அமெரிக்காவுக்கு நோய்க் கிருமியை கடத்தியதை ஒப்புக்கொண்டார். யுன்கிங் ஜியான் சீன கம்யூனிஸ்ட் கட்சிக்கு விசுவாசமாக இருந்துள்ளார். அவர் இந்த நோய்க் கிருமி குறித்த ஆராய்ச்சிக்காக சீன அரசாங்கத்திடமிருந்து நிதி பெற்ற ஆதாரங்கள் உள்ளன - என்றார். (ஐ)

# அமைதி பேச்சுக்கு வருமாறு வடகொரியாவுக்கு அழைப்பு


## தென்கொரியா விடுத்தது

சியோல், ஜூன் 05

அமைதி பேச்சுக்கு வருமாறு வடகொரியாவுக்கு தென்கொரியாவின் புதிய ஜனாதிபதி லி ஜே மியூங் அழைப்பு விடுத்துள்ளார்.

தென்கொரியாவின் புதிய ஜனாதிபதியாக எதிர்க்கட்சியான ஜனநாயக கட்சியின் லி ஜே மியூங் வெற்றி பெற்று பதவியேற்றுள்ளார்.

தனது பதவியேற்பு விழாவில் பேசிய அவர், வடகொரியாவுடன் அமைதி பேச்சுக்கு அழைப்பு விடுத்துள்ளார். எனினும், வடகொரியா அத்துமீறி செயல்பட்டால் அமெரிக்காவுடனான இராணுவ நட்பு மூலம் பதிலடி கொடுக்கப்படும் - என்றும் அவர் தனது உரையில் தெரிவித்துள்ளார். (ஐ)



# நைஜீரியாவில் குண்டுவெடிப்பு; 9 பேர் உயிரிழப்பு; பலர் காயம்!

நைஜர், ஜூன் 05

நைஜீரியாவில் பஸ் நிலையம் ஒன்றில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 9 பேர் உயிரிழந்தனர். பலர் காயமடைந்தனர்.

நைஜீரியாவின் போர்னோ மாகாணம் மைராரி பஸ் நிலையத்திலேயே இந்தக் குண்டுவெடிப்பு இடம்பெற்றுள்ளது.

மேற்கு ஆபிரிக்க நாடானா நைஜீரியாவில் பல்வேறு பயங்கரவாத அமைப்புகள் செயல்படுகின்றன. ஐ. எஸ். அமைப்புடன் தொடர்புடைய போகோ ஹாரம் என்ற அமைப்பு மிகத் தீவிரமான தாக்குதல்களை தொடர்ந்து நடத்தி வருகிறது. இந்த அமைப்பின் தாக்குதல்களில் அந்த நாட்டில் பல ஆயிரக்கணக்கானவர்கள் இதுவரை மரணமாகினர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# நிலநடுக்கத்தை தொடர்ந்து 216 கைதிகள் தப்பியோட்டம்

கராச்சி, ஜூன் 05

பாகிஸ்தானின் கராச்சியில் திடீரென நிலநடுக்கம் ஏற்பட்டது. இதனால் கராச்சியில் உள்ள மாலிர் சிறையில் குழப்பம் ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து அந்த சிறையிலிருந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட கைதிகள் பிரதான வாயிலுக்கு அழைத்து வரப்பட்டனர்.

அப்போது கைதிகளில் ஒரு குழுவினர் திடீரென கதவைத் திறந்துகொண்டு தப்பிச்சென்றனர். இதனால், அங்கு பாதுகாப்பு பணியிலிருந்த காவலர்களுக்கும் அவர்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. இந்த மோதலில் கைதி ஒருவர் கொல்லப்பட்டார். மேலும் 3 சிறைத்துறை அதிகாரிகள், ஒரு காவலர் படுகாயமடைந்தனர்.

விசாரணையில், 216 கைதிகள் தப்பிச் சென்றமை தெரிய வந்தது. தொடர்ந்து நடத்தப்பட்ட தேடுதலில் 80 கைதிகள் கைது செய்யப்பட்டனர். ஏனையவர்களை தேடும் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

நிலநடுக்கத்தால் சிறையின் சுவரில் விரிசல் ஏற்பட்டது. இதனால், பிரதான வாயிலை இலகுவாக உடைத்துக் கொண்டு கைதிகள் தப்பிச் சென்றனர் என்று சிறை அதிகாரிகள் தெரிவித்தனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ. பி. எல். வெற்றிக் கிண்ணத்தை முதன்முதலாக வென்றது ஆர். சி. பி!



அகமதாபாத், ஜூன் 05

ஐ. பி. எல். வரலாற்றில் முதல்முறையாக சம்பியன் பட்டம் வென்றது றோயல் சலஞ்சர்ஸ் (ஆர். சி. பி. ) பெங்களூரு அணி.

குஜராத் மாநிலம் அகமதாபாத் நகரில் உள்ள நரேந்திர மோடி கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் ஆர். சி. பி. அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. அந்த அணி 20 ஓவர்களில் 190 ஓட்டங்கள் எடுத்தது. றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு அணிக்காக பிலிப் சால்ட், விராட் கோலி இணைந்து இன்னிங்ஸை தொடக்கினர். இருவர் மீதும் பெரிய எதிர்பார்ப்பு இருந்தது. இந்நிலையில், 9 பந்துகளில் 16 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார் சால்ட். பஞ்சாப் அணியின் ஜேமிசன் பந்து வீச்சில் ஸ்ரேயாஸ் எடுத்த அபார பிடியெடுப்பு மூலம் அவர் வெளியேற்றப்பட்டார்.

மயங்க் அகர்வால், 18 பந்துகளில் 24 ஓட்டங்கள் எடுத்தார். சஹல் வீசிய முதல் ஓவரில் அவர் விக்கெட்டை இழந்தார். ஆர். சி. பி. அணித் தலைவர் ரஜத் பட்டிதார் 16 பந்துகளில் 26 ஓட்டங்கள் எடுத்தார். பந்தில் வேகத்தை குறித்து ஜேமிசன் வீச, எல். பி. டபிள்யூ. முறையில் அவர் ஆட்டமிழந்தார். இன்னிங்ஸை நிதானமாக அணுகி 35 பந்துகளில் 43 ஓட்டங்கள் எடுத்த விராட் கோலியின் விக்கெட்டை அஸ்மதுல்லா ஒமர்சாய் வீழ்த்தினார். 15 பந்துகளில் 25 ஓட்டங்கள் எடுத்த லிவிங்ஸ்டனை ஜேமிசன் எல். பி. டபிள்யூ. முறையில் வெளியேற்றினார்.

மறுபக்கம் அதிரடியாக இன்னிங்ஸை அணுகினார் ஜிதேஷ் சர்மா. 10 பந்துகளில் 24 ஓட்டங்கள் எடுத்து அவர் ஆட்டமிழந்தார். ஷெப்பர்ட் 17, க்ருணல் பாண்டியா 4, புவனேஸ்வர் ஓர் ஓட்டத்துடன் ஆட்டமிழந்தனர்.

20 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 190 ரன்கள் எடுத்தது ஆர். சி. பி. பஞ்சாப் தரப்பில் ஜேமிசன் மற்றும் அர்ஷ்தீப் தலா 3 விக்கெட்கள் வீழ்த்தினர். அஸ்மதுல்லா, வைஷாக் விஜயகுமார் மற்றும் சஹல் தலா ஒரு விக்கெட் வீழ்த்தினர்.

191 எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பஞ்சாப் அணி களமிறங்கியது.

முதலில் இறங்கிய ப்ரியான்ஷ் ஆர்யா 24 ஓட்டங்களும், ப்ரம்சிம்ரன் சிங் 26 ஓட்டங்களும் எடுத்து வெளியேறினர். அடுத்து வந்த ஜோஷ் இங்லிஸ் 39 ஓட்டங்கள் எடுத்தார். பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட ஸ்ரேயாஸ் ஐயர் ஒரே ஓர் ஓட்டத்துடன் நடையை கட்டினார். நேஹால் வதேரா 15 ரன்கள் எடுத்தார். ஷஷாங்க் சிங் எடுத்த 61 ஓட்டங்கள் மட்டுமே பஞ்சாப் அணியின் நம்பிக்கையை கூட்டியது. எனினும் அடுத்தடுத்து விழுந்த விக்கெட்களால் அந்த அணி பெரிதும் தடுமாறியது.

20 ஓவர் முடிவில் 7 விக்கெட் இழப்புக்கு பஞ்சாப் அணி 184 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. இதன் மூலம் ஐ. பி. எல். வரலாற்றில் முதல்முறையாக ஆர். சி. பி. அணி சம்பியன் பட்டம் வென்றது. (ஐ)

## சிறந்த வீரர்களுக்கு விருதுகள்



அகமதாபாத், ஜூன் 05

நடப்பு ஐ. பி. எல். தொடர் முழுவதும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய வீரர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

இதில், வளர்ந்து வரும் வீரருக்கான விருதை 23 வயதான சாய் சுதர்ஷன் வென்றார்.

ராஜஸ்தான் றோயல்ஸ் அணிக்காக விளையாடிய 14 வயது வீரரான வைபவ் சூர்யவன்ஷி இந்தத் தொடரில் அதிரடி வீரருக்கான விருதை வென்றார். 7 இன்னிங்ஸ்களில் 252 ஓட்டங்களை அவர் எடுத்தார். 18 பௌண்ட்ரிகள் மற்றும் 24 சிக்ஸர்களை அவர் விளாசி இருந்தார். அவரது ஸ்ட்ரைக் ரேட் 206.66.

குஜராத் டைட்டன்ஸ் அணிக்காக நடப்பு தொடரில் 15 இன்னிங்ஸ் ஆடி, 759 ஓட்டங்களை எடுத்தார் தமிழகத்தை சேர்ந்த சாய் சுதர்ஷன். அவரது ஸ்ட்ரைக் ரேட் 156. மொத்தம் 88 பௌண்ட்ரிகள், 21 சிக்ஸர்களை அவர் விளாசியிருந்தார். இதன் மூலம் இந்தத் தொடரில் அதிக ஓட்டங்கள் எடுத்து சிறந்த துடுப்பாட்ட வீரருக்கான ஒரேஞ்ச் தொப்பியை வென்றார்.

இதே குஜராத் அணிக்காக விளையாடிய பிரசித் கிருஷ்ணா, 15 போட்டிகளில் 59 ஓவர்கள் வீசி 25 விக்கெட்களை கைப்பற்றினார். அதன் மூலம் பேர்ப்பிள் (ஊதா) தொப்பி விருதை அவர் வென்றுள்ளார்.

சென்னை சுப்பர் கிங்ஸ் அணி நடப்பு தொடரில் பேர்பிளே விருதை வென்றுள்ளது. இந்த விருதுகளுடன் பரிசுத் தொகையும் வெற்றியாளர்களுக்கு வழங்கப்பட்டது. (ஐ)

## இங்கிலாந்துடனான ரி-20 தொடர் மே. இ. தீவுகள் அணி அறிவிப்பு!

கயானா, ஜூன் 05

மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 ஒருநாள் மற்றும் 3 ரி-20 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது.

ஒருநாள் தொடர் முடிவடையவுள்ள நிலையில் ரி-20 தொடர் ஆரம்பமாகவுள்ளது. இதற்கான மேற்கிந்தியத் தீவுகளின் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

ரி-20 அணிக்கு ஷாய் ஹோப் அணித் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அணி விவரம் - ஷாய் ஹோப் (தலைவர்), ஜான்சன் சார்லஸ், ரோஸ்டன் சேஸ், மத்தியூ போர்ட், ஷிம்ரன் ஹெட்மையர், ஜசன் ஹோல்டர், அகேல் ஹொசைன், அல்சாரி ஜோசப், பிரண்டன் கிங், எவின் லூயிஸ், குடகேஷ் மோடி, ரோவ்மன் பவல், அந்த்ரே ரசல், ஷெர்பேன் ருதர்போர்ட், ரொமாரியோ ஷெப்பர்ட். (ஐ)

## 2 முறை ஆட்டநாயகன் விருது குர்ணல் பாண்ட்யா சாதனை



அகமதாபாத், ஜூன் 05

ஐ. பி. எல். தொடரின் இறுதிப்போட்டியில் இரண்டாவது முறையாக ஆட்டநாயகன் விருதை வென்ற முதல் வீரர் என்ற பெருமையை பெற்றுள்ளார் குர்ணல் பாண்ட்யா.

நேற்றுமுன்தினம் நடந்த ஐ. பி. எல். இறுதிப் போட்டியில் குர்ணல் பாண்ட்யா 4 ஓவர்கள் வீசி 17 ஓட்டங்களை கொடுத்து 2 விக்கெட்களை வீழ்த்தினார். இதன் மூலம் ஆர். பி. பி. அணி வெற்றி பெற முக்கிய பங்காகற்றியிருந்தார். இதனால், அவருக்கு ஆட்டநாயகன் விருது வழங்கப்பட்டது.


முன்னதாக, 2017இல் மும்பை அணி ஐ. பி. எல். கிண்ணத்தை வென்றபோது அவர் ஆட்ட நாயகன் விருதை பெற்றிருந்தார். (ஐ)

## கண்ணீர் விட்டழுத கோலி

அகமபதாபாத், ஜூன் 05

ஐ. பி. எல். வரலாற்றில் முதல்முறையாக ஆர்சிபி அணி வெற்றி பெற்றதையடுத்து விராட் கோலி மைதானத்தில் கண்ணீர் விட்டு அழுதது நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

நேற்று முன்தினம் நடந்த ஐ. பி. எல். இறுதிப் போட்டியில் கடைசி ஓவரில் பஞ்சாப் கிங்ஸ் அணி வெற்றி பெற 4 பந்துகளுக்கு 29 ஓட்டங்கள் தேவை என்ற நிலை வந்தபோது ஆர். சி. பி. அணியின் வெற்றி உறுதியாகி விட்டது.
இதனையடுத்து மைதானத்தில் இருந்த ஆர். சி. பி. ரசிகர்கள் வெற்றிக் கூச்சலிட தொடங்கினர். வீரர்கள் முகத்திலும் உற்சாகம் தொற்றிக் கொண்டது.



மைதானத்தின் நடுவே விராட் கோலி உணர்ச்சிப்பிழம்பாக காணப்பட்டார். அவர் கண்ணிலிருந்து கண்ணீர் வழிந்தோடியது. கண்ணீரை கட்டுப்படுத்தமுடியாமல் அவர் முகத்தை மூடிக் கொண்டு அழுதது பார்ப்பவர்களுக்கு நெகிழ்ச்சியை ஏற்படுத்தியது. (ஐ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தமிழ் அரசு...

சிவஞானம் தெரிவித்தார்.

மேலும், இந்த சந்திப்பு இன்று வியாழக்கிழமை மாலை நடைபெறக் கூடும் என்றும், சந்திப்புக்கான நேரம், இடம் குறித்து இன்னமும் முடிவு செய்யப்படவில்லை எனவும் சிவஞானம் கூறினார்.

இதேசமயம், உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி அமைப்பதற்காக ஈ. பி. டி. பியின் ஆதரவை கோரி, பத்திரிகையாளர் ந. வித்தியாதரன் ஊடாக டக்ளஸ் தேவானந்தாவுக்கு தூது அனுப்பியதாகவும் இதன்போது, கடந்த கால சம்பவங்களை சுட்டிக்காட்டிய டக்ளஸ் தேவானந்தா, தமிழ் அரசு கட்சி உத்தியோகபூர்வமாக அழைப்பு விடுக்கவேண்டும் என்று வைத்த நிபந்தனையின் பேரில் தமிழ் அரசின் பதில் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம் குறுந்தகவல் வாயிலாக உத்தியோகபூர்வ அழைப்பு விடுத்துள்ளார் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ஐ)

## செம்மணியில்...

அவை அவ்வாறே கைவிடப்பட்டுள்ளன. எனவே, தற்போது சித்துப்பாத்தி மயான மனிதப் புதைகுழி சர்வதேச கண்காணிப் பின் கீழேயே அகழப்பட வேண்டும்" - என்றும் கூறினார். (ஐ)

## 6 பேருக்கு...

திரும்பியுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேநேரம், ஆசிய நாடுகளில் தற்போது பரவி வரும் கோவிட் 19இன் புதிய திரிபு குறித்து அச்சமடைய வேண்டியதில்லை என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தென்னிலங்கை...

ஆசனத்தைக் கொண்டுள்ளன.

4 ஆசனங்களுடன் முன்னிலை வகிக்கும் ஐக்கிய மக்கள் சக்தி அங்கு ஆட்சியமைக்க நடவடிக்கை எடுத்துள்ளது. இதற்கு, இலங்கை தமிழ் அரசு கட்சி, ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி, ஜனநாயக தேசிய கூட்டணி ஆகியவை ஆதரவளிக்கத் தீர்மானித்துள்ளன.

இதன்படி, மொத்தமாக 11 உறுப்பினர்களின் ஆதரவுடன் ஐக்கிய மக்கள் சக்தி வெண்கல செட்டிகுளம் பிரதேச சபையில் ஆட்சியமைக்கவுள்ளது. அத்துடன், இந்த சபையில் தவிசாளரா கவும் பிரதி தவிசாளராகவும் முஸ்லிம் இனத்தவர்கள் நியமிக்கப்படவுள்ளனர் என்றும் கூறப்படுகிறது. (ஐ)

## மிகப்பெரும்...

அந்த புதைகுழி தொடர்பான நடவடிக்கைகளுக்கு போதுமான நிதி இல்லை. அகழ்வுகளை நடத்துவதற்கும், சட்ட மருத்துவ அதிகாரி விடயங்களை செயல்படுத்துவதற்கும் நிதி போதுமாக இல்லை. ஒதுக்கப்பட்டுள்ள நிதி 20 நாட்களுக்குக்கூட போதுமானதல்ல.

போதிய நிதி இல்லாமல் அந்த நடவடிக்கைகளை நிறுத்தப்போகின்றனர். இதனால் அந்த இடத்தை மிகப்பெரும் மனித புதைகுழியாக பிரகடனப் படுத்த வேண்டும். அதற்கான நிதியை ஒதுக்கவேண்டும். தேவையென்றால், வெளிநாடுகளில் இருந்து நாங்கள் நிதியை பெற்றுத் தரவும் தயார்.


1996ஆம் ஆண்டு காலப்பகுதியில் அங்கே நடந்த கிருசாந்தி கொலையின் போது சுமார் 600 பேர் அங்கிருந்து காணாமல் போனமை தெரியவந்தது. இதனால் உண்மைகளை கண்டறிய வேண்டும். இதற்காக நிதியை ஒதுக்குமாறு நாங்கள் கோருகிறோம். இதனை பாதுகாப்பதற்காகவும், சாட்சியங்களை பாதுகாப்பதற்காகவும் நடவடிக்கை எடுக்குமாறு கோருகிறோம் - என்றார். (ஐ)

# ஆர். சி. பி. வெற்றிக்கொண்டாட்டம் சனநெரிசலில் சிக்கி 11 பேர் மரணம்!

## 50இற்கும் மேற்பட்டோர் காயம்

பெங்களூரு, ஜூன் 05

ஐ. பி. எல். வெற்றிக் கிண்ணத்தை முதன் முதலாக வென்ற றோயல் சலஞ் சர்ஸ் பெங்களூரு அணியின் வெற்றிக் கொண்டாட்டத்தில் பங்கேற்ற 11 பேர் சனநெரிசலில் சிக்கி உயிரிழந்தனர். 50இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.



ஐ. பி. எல். கிரிக்கெட்டில் கடந்த 17 வருடங்களாக விளையாடி வரும் ஆர்.சி. பி. அணி இதுவரை வெற்றிக் கிண்ணம் வென்றதில்லை. நேற்று முன்தினம் நடந்த இறுதிப் போட்டியில் அந்த அணி வெற்றிக் கிண்ணத்தை கைப்பற்றியது.

இதனை பெங்களூரு ரசிகர்கள் கொண்டாடி வருகின்றனர். இந்த நிலையில், வெற்றிக் கிண்ணத்துடன் வந்த ஆர். சி. பி. அணிக்கு கர்நாடக அரசு சின்னசாமி மைதானத்தில் பாராட்டு விழா நடத்தியது.

இந்த நிகழ்வை காண பல்லாயிரக் கணக்கானோர் திரண்டனர். மைதானத்தின் வெளியே கூடிய பல்லாயிரக்கணக்கான ரசிகர்களால் ஏற்பட்ட சனநெரிசலில் சிக்கியே 11 பேரும் உயிரிழந்தனர். (ஐ)

## உங்களின்...

தந்தை செல்வா காட்டிய தமிழர் விடுதலை கூட்டணியின் வழியில் மக்கள் அனைவரும் ஒன்று சேரவேண்டும். நான் அரசியலில் இருந்து ஒதுங்கத் தயார். இலங்கை தமிழ் அரசு கட்சியினர் தமிழர் விடுதலைக் கூட்டணியில் இணைந்து வெற்றிகரமாக செயல்பட ஒத்துழைப்பதே தந்தை செல்வாவுக்கு நீங்கள் செய்யக்கூடிய மரியாதை - என்றும் அவர் கூறினார். (ஐ)

## அரசியல்...

கொள்கையும் கட்சியால் வலியுறுத்தப்படுகின்ற 13ஆம் திருத்தச் சட்டத்தை ஆரம்பமாகக்கொண்ட அரசியல் தீர்வு வழிமுறையுமே சாத்தியமானது என்பதை அண்மைய அரசியல் நிலவரங்கள் வெளிப்படுத்துகின்றன.

13ஆம் திருத்தச் சட்டத்தைத் தொட்டும் பார்க்க மாட்டோம் என்றெல்லாம் முழங்கியவர்கள், எதனை மறுத்தார்களோ அவற்றை ஏற்றுக்கொள்வதாக ஒப்பந்தம் செய்கிறார்கள். எனவே, எமது நிலைப்பாடுகளை மக்கள் மத்தியில் நம்பிக்கையுடன் ஆழமாக கட்சியின் செயல்பாட்டாளர்கள் ஒவ்வொருவரும் எடுத்துச் செல்லவேண்டும்.

இதேபோன்று, எமது கட்சிக்கு எதிராக முன்வைக்கப்படுகின்ற குற்றச்சாட்டுக்களும் அடிப்படைகள் அற்றவை - அரசியல் உள்நோக்கம் கொண்டவை. தற்போதுகூட, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும், அவர்கள் விரைவாக கைது செய்யப்படுவார்கள் எனவும் செய்திகள் வெளிவருகின்றன.

ஆளும் தரப்பினர் நினைத்தால் விரும்பியவாறு விசாரணைகளை மேற்கொள்ளலாம். எமக்கு எதிராகவும் அவ்வாறான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படலாம். எமக்கு எதிராக அவ்வாறான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமாயின், அவை அரசியல் நோக்கம் கொண்டவையாக இருக்குமே தவிர உண்மையாக இருக்காது - என்றார். (ஐ)

# மேலும் 6 எலும்புக்கூடுகள் அரியாலையில் அடையாளம்

யாழ்ப்பாணம், ஜூன் 05

அரியாலை மனித புதைகுழியில் நேற்றைய தினமும் தொடர்ந்த அகழ்வு பணியில் மேலும் 6 எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

அரியாலை சித்துப்பாத்தி மனித புதைகுழியில் இரண்டாம் கட்டமாக மூன்றாம் நாளான நேற்றும் அகழ்வு பணி முன்னெடுக்கப்பட்டது. இதன்போது, மூன்றாவது எலும்புக்கூட்டுத் தொகுதி பிரித்தெடுக்கப்பட்டு பொதியிடப்பட்டு சட்ட மருத்துவ அதிகாரியின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளது.

நீதிவான் ஏ. ஆனந்தராஜா முன்னிலையில் இந்த அகழ்வு பணிகள் நேற்று இடம்பெற்றன.

தொடர்ந்தும் அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன. (ஐ)

## மட்டக்களப்பு...

மற்றும் பிரதேச செயலர்கள் கலந்து கொண்டனர்.

அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி மாத்தறை மாவட்டத்திலிருந்து பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சந்தேகநபரை...

கண்ட சாட்சிகள் இருவர் மன்றில் முன்னிலையாகியிருந்தனர். ஆனால், அவர்களால் மன்றில் பியுமங்கதான் துப்பாக்கிச்சூட்டை நடத்தினாரா என்பதை அடையாளம் காட்ட முடியவில்லை.

இதைத் தொடர்ந்து, பிரதான சந்தேகநபரை நாளை வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. அத்துடன், அடுத்த விசாரணையில் சந்தேகநபரை மெய்நிகர் வழியில் வழக்கில் முற்படவும் உத்தரவிட்டது.

கடந்த பெப்ரவரி 19ஆம் திகதி கொலை வழக்கு ஒன்றுக்காக நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட பாதாள உலகக் குழு பிரபலமான கணேமுல்லை சஞ்சீவ, கொழும்பு புதுக்கடை நீதிமன்றக் கட்டடத் தொகுதியில் 5ஆம் இலக்க நீதவான் நீதிமன்றத்தின் சாட்சிக்கூண்டில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்தத் துப்பாக்கிச்சூட்டை நடத்தினார் என்று கூறப்படும் பியுமங்கவை அன்றைய தினம் இரவு புத்தளத்தில் வைத்து பொலிஸார் கைது செய்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## வான் திருடியவர் கைது!

கொழும்பு, ஜூன் 05

78 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியான வான் ஒன்றை திருடிய சம்பவம் தொடர்பில் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கேகாலை - தெரணியகலை பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டின் அடிப் படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபர் தெரணியகலை - அங்ஹெட்டிகம பகுதியில் வைத்து நேற்று புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் அங்ஹெட்டிகம பகுதியில் வசிக்கும் 36 வயதுடையவர் ஆவார். திருடப்பட்ட வானும் சந்தேக நபரிடமிருந்து பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

இது தொடர்பில் தெரணியகலை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

**காணி விற்பனைக்கு**

மருதனார்மடம், லவ் லேன் ஒழுங்கையில் 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:
0754185868, 0705181797

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# 300,000 கண்ணிவெடிகளை அகற்றியது ஹலோ ட்ரஸ்ட்!



யாழ்ப்பாணம், ஜூன் 05

**ஹலோ ட்ரஸ்ட் நிறுவனம் 2002ஆம் ஆண்டில் இருந்து இலங்கையில் மனிதாபிமான செயல்பாடான நிலக்கீழ் கண்ணிவெடிகளை அகற்றும் பணிகளை இலங்கையின் வடக்கு கிழக்கு மட்டுமன்றி அனைத்து மாகாணங்களிலும் செய்து வருகின்றது.**

இந்த நிறுவனம் 2002 இல் இருந்து நேற்று முன்தினம் வரை சுமார் 300,000 கண்ணி வெடிகளை அகற்றி தமது மனிதாபிமான செயற்பாட்டின் அடுத்த கட்டத்துக்கு நகர்ந்து செல்கிறது.

இவ் அர்ப்பணிப்பின் வெளிப்பாட்டை ஹலோ ட்ரஸ்ட் நிறுவனத்தின் ஊழியர்கள் நேற்று முன்தினம் முக மாலையில் அமைந்துள்ள தமது வேலைத் தளத்தில் கேக் வெட்டிக் கொண்டாடியமை குறிப்பிடத்தக்கது. (அ-05)

## புலமைப் பரிசில் பரீட்சை எந்த முடிவும் இன்னுமில்லை



கொழும்பு, ஜூன் 05

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையை இரத்து செய்வது குறித்து இப்போதைக்கு எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என்று பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் ரோஹினி கவிரத்ன நேற்று சபையில் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே பிரதமர் இந்தக் கருத்தைத் தெரிவித்தார். (அ)

## 2026ஆம் ஆண்டில் மாணவர்களுக்கு தனித்துவமான அடையாள அட்டை!

கொழும்பு, ஜூன் 05

2026ஆம் ஆண்டில் இலங்கையில் உள்ள மாணவர்களுக்கு தனித்துவமான அடையாள அட்டைகள் வழங்கப் படும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

பாடசாலை நிர்வாகத்தை நெறிப்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட இந்த அமைப்பில், அடுத்த ஆண்டு ஒவ்வொரு மாணவருக்கும் விரிவான டிஜிற்றல் பதிவுகள் இருக்கும்.

ஒவ்வொரு மாணவருக்கும் அவர்களின் பிறப்புச் சான்றிதழ், பரீட்சை முடிவுகள், திறன்கள் அடங்கிய தனிப்பட்ட தரவு கோப்பு, தனித்துவமான அடையாள அட்டையுடன் இணைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## 475 பேர் கைது!

கொழும்பு, ஜூன் 05

நாடளாவிய ரீதியில் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது போதைப்பொருட்களுடன் 475 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி, ஹெரோயின் போதைப்பொருளுடன் 173 பேரும், ஐஸ் போதைப்பொருளுடன் 159 பேரும், கஞ்சா போதைப்பொருளுடன் 126 பேரும், ஹேஷ் போதைப்பொருளுடன் 04 பேரும், கஞ்சா செடிகளுடன் 06 பேரும், போதை மாத்திரைகளுடன் 07 பேரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது 303 கிராம் 644 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளும், 270 கிராம் 704 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளும், 349 கிராம் 802 மில்லிகிராம் கஞ்சா போதைப்பொருளும், 51 கிராம் 996 மில்லிகிராம் ஹேஷ் போதைப்பொருளும், 1491 கஞ்சா செடிகளும், 296 போதை மாத்திரைகளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (அ)

## வெளிநாட்டு மது போத்தல்களுடன் கோடீஸ்வர வர்த்தகர் ஒருவர் கைது!

கொழும்பு, ஜூன் 05

75 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள வெளிநாட்டு மதுபான போத்தல்களுடன் கோடீஸ்வர வர்த்தகர் ஒருவர் மதுவரி திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மதுவரி திணைக்கள அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சோதனையிலேயே சந்தேகநபர் கைது செய்யப்பட்டார். சந்தேகநபரிடமிருந்து 337 வெளிநாட்டு மதுபான போத்தல்கள் கைப்பற்றப்பட்டன. இவற்றின் மதிப்பு 75 இலட்சம் ரூபாயாகும்.

கொழும்பு 5 - திம்பிரிகஸ்யாய பிரதேசத்தில் உள்ள மாடி வீட்டில் மிகவும் இரகசியமாக வெளிநாட்டு மதுபான போத்தல்களை சந்தேகநபர் மறைத்து வைத்திருந்தார் என்று கூறப்படுகிறது.

இது தொடர்பில் மதுவரி திணைக்கள அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## மீனவர் மீது கடற்படையினர் சூடு அறிக்கை கோருகிறார் அமைச்சர்!



கொழும்பு, ஜூன் 05

திருகோணமலை, குச்சவெளி சம்பவம் தொடர்பில் முழுமையான விசாரணைகளை முன்னெடுத்து கூடிய விரைவில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு கடற்படையினருக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரனால் குறித்த பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி அறிக்கையை அடிப்படையாகக் கொண்டே சம்பவம் தொடர்பில் முடிவொன்றுக்கு வரமுடியும் எனவும், அடுத்தக்கட்ட நடவடிக்கையை முன்னெடுக்க முடியும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

திருகோணமலை, குச்சவெளி கடற்பரப்பில் நேற்று சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டார் எனக் கூறப்படும் மீனவர் மீது கடற்படையினர் மேற்கொண்டனர் எனக் கூறப்படும் துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

இது தொடர்பில் அமைச்சரின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. இந்நிலையிலேயே சம்பவம் தொடர்பில் அவர் அறிக்கை கோரியுள்ளார்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர்,

'சட்டவிரோத மீன்பிடி முறையானது கடலுக்கும், நாட்டுக்கும் கேடு விளைவிக்கும். ஒரு சில மீனவர்களின் வருமானத்துக்காக பெரும்பாலானவர்களின் வருமானம் இழக்கப்படுகின்றது.

அதனால்தான் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையை தடுக்குமாறு கடற்படையினருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

திருகோணமலை சம்பவம்கூட, சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையால் ஏற்பட்டதெனக் கூறப்படுகின்றது. விசாரணைகளின் பின்னரே உண்மை என்னவென்பது தெரியவரும் என்று குறிப்பிட்டுள்ளார். (அ)

# திறைசேரி அதிகாரிகளுடன் ஜனாதிபதி விசேட சந்திப்பு!



கொழும்பு, ஜூன் 05

பொருளாதார வெற்றிகளை அடைவதன் மூலம் மாத்திரம் ஒரு நாடு அபிவிருத்தி அடைய முடியாது என் றும், அத்துடன், சமூக அபிவிருத்தி மற்றும் அரசியல் கலாசாரம் ஆகிய மூன்று தூண்களும் ஒரே நேரத்தில் கட்டியெழுப்பப்பட வேண்டுமெனவும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வலியுறுத்தினார்.

நிதி அமைச்சில் நேற்று திறைசேரி அதிகாரிகளுடன் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க இதனைத் தெரிவித்தார்.

சீனா, கொரியா மற்றும் வியட்நாம் போன்ற நாடுகள் பல காலகட்டங்களில் பொது மக்களுடன் இணைந்து மேற்கொண்ட கூட்டு முயற்சியின் பலனாகவே பொருளாதாரத்தில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

ஒரு நாட்டை அபிவிருத்தியை நோக்கி அழைத்துச் செல்வதில் தனிநபர்கள் என்ற ரீதியில் சில பொறுப்புகள் வழங்கப்பட்டுள்ளதாகவும், அதேநேரம் இலக்குகளை அடைய அனைவரும் ஒன்றிணைந்து முயற்சி செய்ய வேண்டுமெனவும் ஜனாதிபதி இங்கு சுட்டிக்காட்டினார்.

அரசியல் அதிகாரம் என்ற வகையில் அதிகாரிகள் மீது தனது கருத்தை மாத்திரம் திணிக்கமாட்டேன் என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, நிபுணத்துவ அறிவு கொண்ட அதிகாரிகள் மற்றும் அரசியல் அதிகாரம் கொண்டவர்களுக்கு இடையே இடம்பெறும் முறையான கலந்துரையாடல்கள் மூலம் தேவையான முடிவுகள் எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

சில தன்னிச்சையான அரசியல் தலையீடுகளால் கடந்த காலங்களில் இலங்கையில் முன்னெடுக்கப்பட்ட திட்டங்கள் தோல்வியடைந்த விதம் குறித்தும் இதன் போது ஜனாதிபதி நினைவு கூர்ந்தார்.

மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த துறைகளை அரசாங்கத்தின் கீழ் பேணுவதுடன், அரசாங்கத்தின் அடிப்படைக் கொள்கைகளின் அடிப்படையில் குறித்த நிறுவனங்களில் கட்டமைப்பு ரீதியான மாற்றங்களைச் செய்வதற்கு உடனடி நடவடிக்கை எடுக்குமாறும் ஜனாதிபதி இங்கு திறைசேரி அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

தொழில் அமைச்சர் மற்றும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் அனில் ஜயந்த பெர்னாண்டோ, நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சர் ஹர்ஷண சூரியப்பெரும, நிதி அமைச்சின் செயலாளர் மகிந்த சிறிவர்தன மற்றும் திறைசேரியின் சிரேஷ்ட அதிகாரிகள் பலரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 05.06.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.